Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 182

புதன்கிழமை
27 மே 2026

வைகாசி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

புதன்பொய்கை

**40 நாடுகளுக்கு இலவச விசா!**

விரிவு பக்கம்:- 05

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## காணிகளை விடுவிக்கோம் இராணுவம் அழுங்குப்பிடி!

ஏனைய மாவட்டங்களில் ஓரளவு இணக்கம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று அழுத்தம் வழங்கப்பட்டபோதிலும், கணிசமான கோரிக்கைகளை இராணுவம் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. »15

காணிவிடுவிப்புத் தொடர்பான

## உயர்மட்டக் கலந்துரையாடலில் புறக்கணிக்கப்பட்ட எம்.பி.க்கள்

யாழ்ப்பாணம், மே 27

காணிகளை விடுவிப்பது தொடர்பாக வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள »15



## படைத்தரப்புக்கு முன்னால் பம்மிய யாழ். அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மே 27

இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிகாரிகள் நேற்றுப் போதிய அழுத்தத்தை வழங்கவில்லை.

காணி விடுவிப்புத் தொடர்பான கலந்துரையாடலில் அரச அதிகாரிகளால் முன் »15

## உயர்பாதுகாப்பு வலயத்தில் விரைவில் காணி விடுவிப்பு!

அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

வடமாகாணத்தில் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள சில காணிகளை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர் »15

காணி விடுவிப்புக்காக

## இராணுவத்துடன் ஆளுங்கட்சியினர் வாக்குவாதம்!

யாழ்ப்பாணம், மே 27

இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, இராணுவத்துடனும் அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடனும் ஆளுங்கட்சியினர் நேற்று கடும் வாக்குவாதத்தில் »15

## வீட்டிலிருந்து வேலை எண்ணவில்லை அரசு!

கொழும்பு, மே 27

வீட்டில் இருந்து வேலைசெய்யும் நடைமுறையைப் பின்பற்றுவது தொடர்பில் எவ்வித பரிசீலனையும் இடம்பெறவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். »15

## பொய்.!பொய்..!!பொய்..!!

யாழ்ப்பாணம், மே 27

காணி விடுவிப்புத் தொடர்பாக பலாலியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் இராணுவம் பொய்யுரைத்துள்ளது.

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் விடுவிக்கப்பட்ட போதிலும் அதன் வீதி இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்த விடயம் தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியபோது, அந்த வீதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டாயிற்று என்று இராணுவத்தினர் கூறியிருந்தனர். இதையடுத்து, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் »15

## பலாலி வீதி ஊடான பயண நேரம் நீடிப்பு!

யாழ்ப்பாணம், மே 27

பொதுமக்களின் பயன்பாட்டுக்காக இரவு 8 மணிவரை யாழ்ப்பாணம் பலாலி வீதி திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. »15



## தேசிய கால்பந்தாட்ட அணியில் மகாஜன மாணவிகள் நால்வர்!



யாழ்ப்பாணம், மே 27

தேசிய கால்பந்தாட்ட பெண்கள் அணியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகள் நால்வர் இடம்பிடித்துள்ளனர். தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான பெண்கள் கால்பந்தாட்டத் தொடர் இந்தியாவில் நடைபெறவுள் »15

**மூளைக்காய்ச்சலுடன் 32 பேர் அடையாளம்**

விரிவு பக்கம்:- 05

**ஏற்றுமதி வருமானம் 5,784.38 மில். டொலர்**

விரிவு பக்கம்:- 03

முச்சந்தி முனி

"முதலையும் மூர்க்கனும் மட்டுமில்லை ஆமியும் கொண்டது விடாது கண்டியளோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4443 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 29 33 66 73 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1510 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 17 27 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0469 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 0 7 9 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2549 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 24 32 56 67 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6201 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 9 4 1 8 2 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2231 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 01 39 63 80 |
| விசேட எழுத்து | I |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0317 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 22 52 59 |

## இலங்கைக்கான கடன்வசதி

# அடுத்தகட்ட மீளாய்வை ஆராய இன்று கூடுகின்றது ஐ.எம்.எப்.!

**கொழும்பு, மே 27**

**இலங்கைக்கான சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டம் குறித்த 5ஆம் மற்றும் 6ஆம் கட்ட மீளாய்வுகள் தொடர்பில் எட்டப்பட்ட உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாட்டுக்கு இறுதி ஒப்புதல் அளிப்பது தொடர்பாக ஆராய்வதற்கு இன்று புதன்கிழமை நாணயநிதியத்தின் இயக்குநர் சபை விசேடமாக ஒன்று கூடி ஆராயவுள்ளது.**

அரசாங்கத்தின் வரிவிதிப்புகள் மற்றும் மத்திய வங்கியின் திடீர் கொள்கை வட்டி வீத அதிகரிப்பு போன்ற கடுமையான நிதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், இந்த இயக்குநர் சபையின் ஒப்புதல் இலங்கைக்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்றிட்டப் பிரதானி எவான் பபஜோர்ஜியோ கடந்த சில ஆண்டுகளில் பெரும்பாகப் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதிலும், இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ வெளிநாட்டுக் கையிருப்பு மட்டத்தை வலுப்படுத்துவதிலும் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

இலங்கை அதிகாரிகளின் இந்தத் தொடர்ச்சியான மற்றும் கடுமையான முயற்சிகளின் ஊடாகப் பொதுமக்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் மத்தியிலான சந்தை நம்பிக்கை மீண்டும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. அதனூடாக நாட்டின் பொருளாதாரம்தற்போதுஸ்திரமடைந்துள்ளது. மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழல் மற்றும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடி காரணமாக, அண்மையில் இலங்கையின் உள்நாட்டுப் பணவீக்கம் 5.4 சதவீதமாக உயர்ந்துள்ளது.

எனினும், இலங்கையின் தற்போதைய கொள்கைசார் நிதிக்கட்டமைப்பானது கடந்த கால பேரழிவுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது மிகவும் முன்னேற்றகரமான மற்றும் முதிர்ச்சியடைந்த நிலையில் உள்ளது. சமகாலத்தில் தோன்றிவரும் இத்தகைய வெளியக அழுத்தங்களைக் கையாள்வது எமக்கு இலகுவான விடயம் அல்ல என்றாலும், இலங்கையிடம் தற்போது காணப்படும் வலுவான கொள்கைக் கட்டமைப்பின் ஊடாக அதனை ஓரளவு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் கையாளமுடியும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0909 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 1 7 0 7 3 1 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3175 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 09 49 53 78 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 23 33 35 48 |
| வெற்றி வாரம் | 5336 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 1005 |
| வெற்றி இலக்கம் | 05 06 18 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| மேஷம் | |
| வெற்றி இலக்கம் | 17 33 49 50 |
| சீட்டிழுப்பு வாரம் | 4887 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கம் | 27 42 71 75 |
| வெற்றி வாரம் | 2351 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 26.05.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 33 44 58 61 |
| வெற்றி வாரம் | 3001 |



## சரண குணவர்த்தன வழக்கு ஜூனில்!

கொழும்பு, மே 27

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருந்த முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு வழக்குகளின் தீர்ப்பு அறிவிப்பை ஜூன் மாதம் 9ஆம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் மொஹமட் மிஹைல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்குகளின் தீர்ப்புகள் இன்னும் தயாராகாததால் தீர்ப்பின் அறிவிப்பை ஜூன் மாதம் 9ஆம் திகதி ஒத்திவைப்பதாக நீதியரசர் உத்தரவிட்டார். 2006 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றியபோது, அந்த நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொண்டதன்மூலம் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சுமத்தி, முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

## ரூபா வலுவடைவு!

கொழும்பு,மே 27

அமெரிக்க டொலருக்கு நிகராக வீழ்ச்சியடைந்து வந்த இலங்கை ரூபா நேற்றுமுன்தினம் மீண்டும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதன்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 326.01 ரூபாவாகவும், அதன் விற்பனை விலை 336.42 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலரின் கொள்வனவு மற்றும் விற்பனை விலைகள் முறையே 342.63 ரூபாவாகவும் மற்றும் 354.03 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (ச-இ)

## சஷி வீரவன்ஸ வழக்கு ஜூலைக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 27

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவியான சஷி வீரவன்ஸவுக்கு எதிரான, போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து இராஜதந்திர கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டமை தொடர்பான வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதி முன்னெடுக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சஷி வீரவன்ஸ கடந்த திங்கட்கிழமை வழக்குத் தவணையின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். (ச-இ)



## நீதிச்சேவை ஆணைக்குழுவில் நீதியரசர் யசந்த கோதாகொட

கொழும்பு, மே 27

நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக உயர்நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொடவை நியமிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை ஏகமனதாக அனுமதி வழங்கியுள்ளது. அரசியலமைப்புப் பேரவை அதன் தலைவர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் கூடியது.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜாவின் ஓய்வைத் தொடர்ந்து நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட பரிந்துரையை அரசியலமைப்புப் பேரவை பரிசீலனை செய்தது.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் யசந்த கோதாகொடவை நீதிச்சேவையின் உறுப்பினராக நியமிக்க அரசியலமைப்புப் பேரவை அனுமதியளித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஏற்றுமதி வருமானம் 5,784.38 மில். டொலர்

கொழும்பு, மே 27

**2026 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதிக்கான நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானம் 5,784.38 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது என்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது- சவாலான உலகப்பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், 2026ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருமானம் 5.7 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை ஈட்டியுள்ளோம். கடந்த ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் பொருள்கள் மற்றும் சேவைகள் உள்ளடங்கிய மொத்த ஏற்றுமதி 5784.38 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 4.3 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. மொத்த ஏற்றுமதி 1.38 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளதுடன், இது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தை விட 6 சதவீத வருடாந்த வளர்ச்சியைக் காட்டுகிறது. இதில் பொருள்களின் ஏற்றுமதி 9.87 சதவீதமாக அதிகரித்து 1.06 பில்லியன் அமெரிக்க டொலராகவும், சேவைத் துறையின் ஏற்றுமதி 317.16 மில்லியன் அமெரிக்க டொலராகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் சிறந்த செயற்றிறனைக் காட்டிய துறைகளில் தேங்காய் சார்ந்த தயாரிப்புகள், உணவு மற்றும் பானங்கள், மின்சார மற்றும் இலத்திரனியல் உதிரிப்பாகங்கள், கடல் உணவு, இறப்பர் தயாரிப்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்மற்றும்வணிகச் செயல்முறை மேலாண்மை மற்றும் சேவைகள் அடங்குகின்றன. தொடர்ச்சியான ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள், புதிய சந்தைகளை நோக்கிய விரிவாக்கம் மற்றும் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடுகள் ஆகியன 2026ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சி வேகத்தை மேலும் வலுப்படுத்தும்- என்றார். (ச-இ)




## கருத்தையும் களவெடுக்கினம்!

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்ர வரலாற்றுத் திணைக்களப் பேராசிரியர் ஒருத்தரை இப்ப இடைநீக்கம் செய்திருக்கினம். காரணம் என்னவெண்டால், மனுசன் பெரிய 'கருத்துத் திருட்டு' வேலையில இறங்கியிருக்கிறார். மறைந்த பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன கஷ்டப்பட்டு இங்கிலிஷில எழுதின ஆய்வுக் கட்டுரையை அப்பிடியே 'கொப்பி' பண்ணி, அது தன்ர படைப்பு எண்டு சொல்லி இந்தப் பேராசிரியர் வெளியிட்டிருக்கிறார். இதைப் பார்த்த அந்தப் பேராசிரியரின்ர சொந்தக்காரர் முறைப்பாடு செய்ய, இப்ப குட்டு வெளிப்பட்டிருக்கு. விசாரணையில பேராசிரியரில பிழை இருக்கு எண்டு தெரிஞ்ச கையோட, அவரை இடைநீக்கம் செய்ததோட, விசாரணை முடியும் மட்டும் பேராதனைப் பல்கலைக்கழத்துக்குள்ள காலும் வைக்கக்கூடாது எண்டு சொல்லி 'ஆப்பு' வைச்சிட்டினம்.

ஆனால் இது பேராதனையில மட்டும் நடக்கிற கூத்து இல்லை கண்டியளோ! எங்கட யாழ்ப்பாணக் கம்பஸிலயும் இப்பிடியான புலமைச் சொத்துத் திருட்டுகள் கன காலமா 'அமுக்கி வாசிச்சு' நடக்குதெண்டு ஒரு பெரிய கதையே இருக்கு.பாவம், பிள்ளையள் கஷ்டப்பட்டு எழுதின 'ரிசேர்ச்' கட்டுரையளைக் களவெடுத்து, அதுகளையெல்லாம் ஒண்டாத் தொகுத்துத் தங்கட பேரில வெளியிடுற லெக்சரர்மார் இஞ்சயும் இருந்திருக்கினம். அதுமட்டுமில்ல, முந்தின காலத்தில இருந்தவை செய்த ஆய்வுக்கட்டு ரையின்ர மட்டையைக் கிழிச்சுப் போட்டுட்டு, அந்த உள் ளடக்கத்துக்குத் தங்கட பேரை அடிச்சுப் புத்தகமாக்கின 'பெரிய' பேராசிரியர்மாரைப் பற்றியும் குற்றச்சாட்டுகள் வந்துதான் இருக்கு.இப்ப என்னவெண்டால் புதுசா ஒரு நுட்பம் வந்திருக்கு. வெளிநாட்டுக் கம்பஸுகளில யாரா வது செய்த ஆய்வுக்கட்டுரையை எடுத்து, அதை அப் படியே ஏ.ஐ. யின்ர உதவியோட மொழிபெயர்த்து, அப்பிடியே 'கொப்பி' பண்ணித் தங்கட கட்டுரை எண்டு 'எழுப்பம்' காட்டுற மெத்தப்படிச்ச மேதாவிமாரும் இஞ்ச இருக்கினம். கம்பஸில மட்டுமில்லை, இலக்கியவாதியளி லையும் இப்பிடிக் கள்ளவேலை செய்யிறவை இருக்கி னம். உதயன் பேப்பரின்ர ஆரம்பகாலம் தொட்டு பிரதம ஆசிரியரா இருந்த கானமயில்நாதன் ஐயாவைத் எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும். அவர் இளம்பெடியனா இருக்கேக்க 'எங்கிருப்பாள்?' எண்ட தலைப்பில முதன்முதலா ஒரு கவிதையை எழுதி, அதைப் பேப்பருக்கு அனுப்பிறதுக்காக ரைப் பண்ணிறதுக்கு தன்ர சிநேகிதனிட்ட குடுத்திருக்கிறார். பிறகு பார்த்தால் அந்தச் சிநேகிதன்ர பேரில அந்தக் கவிதை அதே பேப்பரில வந்திருக்கு. இப்பிடியெல்லாம் ரைப் பண்ண வாங்கினவை தங்கட பேரில கவிதையை அனுப்பின மாதிரி வேற ஆக்களின்ர படைப்புகளை ஆட் டையைப் போட்டவை கனபேர். இப்ப அதில ஒருத்தர் தான் பேராதனையில மாட்டியிருக்கிறார்.

கம்பஸில் படிக்கிற பெடியள் 'அசைன்மென்ட்டை' எழுதேக்க, வேற பெடியளின்ரையைக் கொப்பியடிச்சால் கூட அவனைக் கம்பஸை விட்டுத் தூக்கிற அளவுக்கெல்லாம் அலுவல் பாக்கினம். ஆனால், அதே கம்பஸ் பெடியளுக்கு வழிகாட்ட வேண்டிய பேராசிரியர்மாரே இப்பிடித் திருட்டு வேலையில இறங்கினால் அதுக்கு என்னப்பா நியாயம்? கல்வி எண்டது வெறும் பட்டத்தில மட்டும் இல்லை, அது நேர்மையில தான் இருக்கு. அதுக்காக எல்லாரும் அப்பிடி கொப்பியடிச்சான் லெக்சரர்மார் இல்லை. நிறையப் பேர் புலமையுள்ளவை தான். ஆனால் ஒரு சில கொப்பியடிச்சான் லெக்சரர்மாரால எல்லாருக்கும் கெட்டபேர். பேராதனையில ஒருத்தர் மாட்டுப்பட்டது போல, எங்கட யாழ்ப்பாணக் கம்பஸிலயும் ஆரெல்லாம் இப்பிடி 'தில்லாலங்கடி' வேலை செய்தவை எண்டு ஒருக்கா உருப்ப டியா விசாரிச்சால், கனபேர் கையும் மெய்யுமா மாட்டுப்படுவினம் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

## புதிய கட்சி தொடங்கும் சரத் பொன்சேகா



கொழும்பு,மே.27

புதிய அரசியற்கட்சியை உருவாக்கவுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- எமது கட்சியில் எவ்வாறானவர்களை இணைக்கவேண்டும் என நாம் வகுத்த நிர்ணயங்களுக்கமைய 75 சதவீத பணி நிறைவு பெற்றிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டிய நபர்கள் பற்றிய தேடுதல் தற்போது இடம்பெறுகின்றது. ஆரம்பத்தில் நானே கட்சிக்குத் தலைமை வகிப்பேன். அதன்பின்னர் சிறந்தவர்களுக்கு இடமளிக்கப்படும். நான் 100 வருடங்களுக்கு அரசியலில் ஈடுபடமுடியாதுதானே? அரசாங்கம் வலுவாகப் பயணித்தால் எமது ஆதரவு வழங்கப்படும். ஆனாலும் சிறந்த மாற்றுச் சக்தியொன்றும் இருக்கவேண்டும் - என்றார். (ச-44)


## பஸ் கவிழ்ந்து 19 பேர் காயம்

கொழும்பு,மே 27

கஹதுடுவ, தியகம வீதியில் ஆடைத்தொழிற்சாலைப் பணியாளர்களை ஏற்றிச்சென்ற பேருந்து வீதியை விட்டு விலகி வயல்வெளியொன்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் 19 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வீதியில் வந்த மற்றுமொரு வாகனத்துக்கு இடமளிக்க முயன்றபோதே, பேருந்து வீதியை விட்டு விலகி இந்த விபத்து சம்பவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## அதிகரிக்கும் பணவீக்க எதிரொலி உயர்த்தப்பட்டன வட்டி வீதங்கள்!



### மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு,மே 27

அதிகரித்துவரும் பணவீக்கம் மற்றும் வெளிநாட்டுச் சந்தை அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இலங்கையின் ஓரிரவுக் கொள்கை வட்டி வீதத்தை 7.75 சதவீதத்திலிருந்து 8.75 சதவீதமாக ஒரு சதவீதத்தினால் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. உலகளாவிய ரீதியில் அதிகரித்த எண்ணெய் விலைகளின் காரணமாக உள்நாட்டு எரிபொருள் விலைகள் அதிகரித்து, கடந்த ஏப்ரல் மாதம் பணவீக்கம் 5.4 சதவீதமாக அதிகரிப்பதற்கு வழிகோலின. மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை கூடி எடுத்த அவசரத் தீர்மானத்தின் காரணமாக, உள்நாட்டு வணிக வங்கிகளின் கடன் வட்டி வீதங்கள் மற்றும் லீசிங் வட்டி விகிதங்கள் உயரவுள்ளன. அதேவேளை, கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டுக்கையிருப்புகள் 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளன. அதிகரித்துவரும்பணவீக்க அழுத்தங்களைக் கருத்திற்கொண்டு நாணயக் கொள்கையை மேலும் இறுக்கமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 27

வி.குகநாதன் மற்றும் எஸ்.வி.பால முரளி ஆசிரியர்களின் வெளியீடுகளில் ஒன்றான GRADE 9 MATHEMATICS(ENGLISH MEDIUM) நூல் வெளியீடு நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு வேலணை மத்திய கல்லூரி சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஆங்கிலப் பேராசான் அமரர் த.ந.பஞ்சாட்சரம் நினைவாக நூலகங்கள் மற்றும் மாணவர்களுக்கான கணிதநூல் தொகுதிகள் அன்பளிப்பும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற எஸ்.எல்.ஏ.எஸ்.(சிறப்புத் தரம்) அதிகாரியும் வழக்கறிஞரும் (ஏ.ஏ.எல்.) மற்றும் நோட்டரி பப்ளிக் (என்.பி.)வடக்கு மாகாணத்தின் முன்னாள் தலைமைச் செயலாளருமான எல். இளங்கோவன், சிறப்பு விருந்தினராக சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய அதிபர் லீனஸ் இக்னேஷஸ் றோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நூல் மதிப்பீட்டுரையை வடமாகாண கல்வித் திணைக்கள கணிதப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நவநீதன் ஆற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## வடமராட்சி ஊடக இல்லத்தால் சிவாஜிலிங்கத்துக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், மே 27

சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகி சத்திரசிகிச்சையை எதிர்நோக்கியுள்ள எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு, வடமராட்சி ஊடக இல்லத்தால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்துக்கு நேரடியாகச்சென்ற ஊடக இல்லத்தினர் அவரது உடல்நலம் குறித்து கேட்டறிந்தனர். இல்லத்தின் சார்பில் ஒரு தொகை நிதியுதவியையும் வழங்கியுள்ளனர். (க-100)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், மே 27

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி பெரியபுலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் ஜீன் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

8ஆம் திகதி திங்கட்கிழமை பகல் தூர்வா கணபதி உற்சவமும், 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு நிர்த்த கணபதி உற்சவமும், 10ஆம் திகதி புதன்கிழமை பகல் சக்தி கணபதி உற்சவமும், 11ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 108 சங்காபிஷேக பக்திமுக்தி பாவன உற்சவமும், 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வசந்தோற்சவமும், 13ஆம் திகதி சனிக்கிழமை பகல் தைலாப்பியாங்க உற்சவமும் இடம்பெறவுள்ளன.

14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிஷேகம், சங்கல்பம், திரவிய அபிஷேகம், மூலஸ்தான பூஜை, ஸ்தம்ப பூஜை, வசந்தமண்டப பூஜை என்பனவும் 15ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.58 மணி முதல் 10.34 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா சங்குஸ்தாபனம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## ஜுலை மாத இறுதிவரையில் எரிபொருள் இருப்பு கைவசம்

கொழும்பு, மே 27

எதிர்வரும் ஜுலை மாதம் இறுதிவரை நாட்டுக்குத் தேவையான எரிபொருள் இருப்புக்கள் உள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மொத்த விநியோக முனைய நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளதாவது-

இந்த மாதம் 28 மற்றும் 31ஆம் திகதிகளில் மேலும் இரண்டு கச்சா எண்ணெய்க் கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன.

எரிபொருள் விலை உயர்வு அல்லது குறைப்பு தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. எதிர்வரும் மாதங்களில் உலக சந்தை நிலைவரத்தைப் பொறுத்தே விலைமாற்றங்கள் இடம்பெறக் கூடும்-என்றார். (எ-இ)



## முதியோர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 27

தென்மராட்சி பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் மே மாதத்துக்குரிய முதியோர் கொடுப்பனவு நேற்றுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. நலன்புரித்திட்டத்தில் இணைக்கப்படாத முதியோர் மாத இறுதிக்குள் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளுமாறு அஞ்சலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-9)

## போதைப்பொருள்களுடன் 1,069 பேர் திங்களன்று கைது

கொழும்பு, மே 27

நாட்டில் போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கிலான 'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசியத் திட்டத்தின்கீழ், நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 1,069 பேர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து ஒரு கிலோ 572 கிராம் ஹெரோய்ன், 962 கிராம் ஐஸ், 44 கிராம் கொக்கெய்ன், ஒரு கிலோ 119 கிராம் கஞ்சா, 7,008 கஞ்சாச் செடிகள், 28 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 74 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,020 போதைமாத்திரைகள், 93 கிராம் மதனமோதகம் மற்றும் 7 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## மாணவியைக் காப்பாற்ற முயன்ற ஆசிரியர் கடலில் மூழ்கி மரணம்!

கொழும்பு, மே 27

கிரிந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிந்த கடலில் நீராடச் சென்ற ஆசிரியர் ஒருவர் நீரில் மூழ்கி நபரொருவர் உயிரிழந்துள்ளார். கிரிந்த கடலில் நீராடச் சென்ற ஒரு குழுவினர் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், கடற்கரையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர் காக்கும் பிரிவின் உத்தியோகத்தர்களால் நீரில் அடித்துச் செல்லப்பட்ட குழுவினர் மீட்கப்பட்டுள்ளனர்.

ஆபத்தான நிலையில் இருந்த ஆசிரியர் ஒருவரும் சிறுமியும் சிகிச்சைக்காக கிரிந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஆசிரியர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் பலத்கும்பர பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஆசிரியர் எனத் தெரியவந்துள்ளது.

பலத்கும்பர பகுதியிலுள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர்கள் சிலரும் மாணவர் குழுவொன்றும் சுற்றுலா சென்றபோது இந்த அனர்த்தத்தில் சிக்கியுள்ளனர். அலையில் அடித்துச் செல்லப்பட்ட 14 வயது மாணவியைக் காப்பாற்றக் கடலில் இறங்கியபோதே, ஆசிரியர் நீரில் மூழ்கியுள்ளார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமி மேலதிக சிகிச்சைக்காக திஸ்ஸ மஹாராம மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-இ)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முயற்சிகள் அனுகூலமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆதாயமும் தருவதாக இருக்கும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும்வாய்ப்புஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாகமுடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேச்சில் பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கக்கூடும்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**துலாம்:** வீண்செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமான வரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடுவது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்குத் திடீர்ச் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## 'உண்மை உங்களை விடுதலையாக்கும்'

கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஜீவத்த பீரிஸ், 'இலங்கையின் இறுதிப்போரில் நிகழ்ந்தது இனப்படுகொலையே' என்று வெளிப்படையாகக் கூறியுள்ள நிலையில், அதற்கு கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் திருச்சபையும் தெரிவித்துள்ள கண்டனம் ஆச்சரியத்தையும் அதேசமயம் ஆழ்ந்த கவலையையும் அளிக்கிறது. 'இலங்கையில் நடந்தது பயங்கரவாதத்திற்கு எதிரான போரே தவிர, இனக்குழுவுக்கு எதிரான போர் அல்ல' என்ற திருச்சபையின் உத்தியோகபூர்வ விளக்கம், முள்ளிவாய்க்கால் மண்ணில் கொத்துக்கொத்தாக மடிந்துபோன ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் ஆன்மாக்களை மீண்டும் ஒருமுறை சிலுவையில் அறைவதற்குச் சமமாகும். நீதிக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுக்க வேண்டிய ஒரு மதம், அரச இயந்திரத்தின் மொழியில் 'பயங்கரவாத ஒழிப்பு' என்று போரை நியாயப்படுத்துவது அதன் அடிப்படைப் போதனைகளுக்கே முரணானது.


கத்தோலிக்கத் திருச்சபை என்பது அதிகார வர்க்கத்தின் கவசமாக இருக்கவேண்டிய ஒன்றல்ல; அது எளிய மக் களின், குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக இருக்கவேண்டும். இறுதிப்போரின்போது வான்வழித் தாக்குதல்களாலும், எறிகணை வீச்சுகளாலும் தேவாலயங்களுக் குள் தஞ்சமடைந்திருந்த மக்கள் கொல்லப்பட்ட போது, அது எத்தகைய 'பயங்கரவாத ஒழிப்பு?' உணவும் மருந்தும் இன்றி மக்கள் பட்டினியால் மடிந்தபோது, அது எதற்காக நடத்தப்பட்ட போர்? இத்தகைய உண் மைகளைத் தட்டிக்கேட்க வேண்டிய திருச்சபை, இன்று ஓர் அருட்தந்தை உண்மையை உரைத்ததற்காக அவருக்கு எதிராகக் கண்டனம் வெளியிடுவது அதன் நடுநிலைமையைக் கேள்விக்குறியாக்குகிறது. மக்களுக்காகக் குரல் கொடுக்கத் துணிவில்லாதபோது, குறைந்தபட்சம் அவர்களுக்கு எதிராகவேனும் குரல் கொடுக்காமல் இருப்பதே ஒரு மத நிறுவனத்திற்குரிய கண்ணியமாகும்.

இந்தத் தருணத்தில், இதே கத்தோலிக்கத் திருச்சபையின் அங்கமாக இருந்து கொண்டு, தமிழினத்தின் அவலங்களை சர்வதேச அரங்கிற்குத் துணிச்சலுடன் கொண்டு சென்ற மன்னார் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பணியையும் குரலையும் திருச்சபை மறந்துவிட்டதா? இறுதிப்போரில் காணாமற்போனவர்களின் எண்ணிக்கையையும், கொல்லப்பட்டவர்களின் விபரங்களையும் புள்ளிவிவரங்களுடன் முன்வைத்து, பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக நின்றவர் அவர். ஆயர் இராயப்பு ஜோசப் போன்றோர் அன்று காட்டியதுதான் உண்மையான கிறிஸ்தவ தர்மம். 'உண்மை உங்களை விடுதலையாக்கும்' என்ற விவிலிய வசனத்தை ஏற்றுக்கொண்ட திருச்சபை, இன்று அரசியல் காரணங்களுக்காக உண்மையை 'சித்தாந்தம் இல்லை' என்று புறந்தள்ளுவது வரலாற்றுத் தவறு.

இலங்கையில் 'நல்லிணக்கத்தை' உறுதிப்படுத்த விரும்புவதாக ஆயர்கள் பேரவை கூறுகிறது. ஆனால், உண்மையான நல்லிணக்கம் என்பது நடந்த அநீதியை மூடிமறைப்பதில் இல்லை; மாறாக அநீதியை ஏற்றுக்கொண்டு அதற்கான நீதியைப் பெற்றுத்தருவதிலேயே அடங்கியுள்ளது. கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான உயிர்களை வெறும் 'பயங்கரவாதத்தின் விளைவு' என்று சுருக்கிப் பார்ப்பது அந்த மக்களின் வலியை அவமதிப்பதாகும். திருச்சபை தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யவேண்டும். அதிகாரத்திற்கு அஞ்சாமல் உண்மையை உரக்கச் சொல்லிய ஜீவத்த பீரிஸ் போன்றவர்களின் நேர்மைதான், மங்கிப்போயிருக்கும் திருச்சபையின் அறத்தை மீண்டும் ஒளிரச் செய்யும். இல்லையேல், திருச்சபை மக்களிடமிருந்து இன்னும் அந்நியப்பட்டு வெறும் சடங்குப்பெட்டியாகவே எஞ்சிவிடும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## பொய்யாமொழி



எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து

**பொருள்:** பணிவுடையராக ஒழுகுதல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும்; அவர்களுள் சிறப்பாகச் செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றதாகும்.



## மூளைக்காய்ச்சலுடன் 32 பேர் அடையாளம்



கொழும்பு, மே 27

**மூளைக்காய்ச்சல் அல்லது மெனின்ஜைடிஸ் எனும் வைரஸ் நோய் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் 63 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 32 பேருக்கு இந்த நோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரின் தொற்றுநோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் பாலித கருணாபெம தெரிவித்துள்ளார்.**

தெனியாய பகுதியில் சிறுவர்கள் மத்தியில் மூளைக்காய்ச்சல் அல்லது மெனின்ஜைடிஸ் எனும் வைரஸ் தொற்று பரவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த வைரஸ் முக்கியமாக அசுத்தமான நீர் மற்றும் உணவு மூலமும், உமிழ்நீர் வழியாகவும் மிக நெருங்கிப் பழகுபவர்கள் மத்தியிலும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

### மூளைக்காய்ச்சல் பரவல் தடுக்க வழிகாட்டுதல்கள்

கொழும்பு, மே 27

பாடசாலைகள் மற்றும் சமூக அடிப்படையிலான பல்வேறு பகுதிகளுக்கு மூளைக்காய்ச்சல் பரவி வருவதாகத் தென்படுவதால் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அனைத்து சுகாதாரத் துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. காய்ச்சல், தலைவலி மற்றும் வாந்தி ஆகியவை முக்கியமான அறிகுறிகளாகும். மேலும் மூளைக் காய்ச்சல் 7 நாள்களுக்குள் சரியாகிவிடும் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## 40 நாடுகளுக்கு இலவச விசா!


கொழும்பு, மே 27

குறுகிய காலத்துக்கு இலங்கைக்கு வருகை தரும் 40 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கான 30 நாள்கள் செல்லுபடியாகும் இலவச சுற்றுலா விசாவசதியை இலங்கை வழங்கியுள்ளது. அதன்படி அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஒஸ்திரியா, மலேசியா, சவூதி அரேபியா, .ஜேர்மனி, நேபாளம், தென்கொரியா, பஹ்ரைன், இந்தியா, நெதர்லாந்து, ஸ்பெயின், பெலாரஸ், இந்தோனேசியா, நியூசிலாந்து, ஸ்வீடன், பெல்ஜியம், கனடா, சீனா, செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, ஈரான், இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், கஸகஸ்தான், குவைத், நோர்வே, ஓமான், பாகிஸ்தான், போலந்து, கட்டார், ரஷ்யா, சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, துருக்கி, ஐக்கிய அரபு இராச்சியம், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரஜைகளுக்கு இந்த வசதி கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இலங்கைப் பொலிஸாருக்கு இந்தியா கப் ரக வாகனங்கள்

கொழும்பு, மே 27

இலங்கைப் பொலிஸாரின் பயன்பாட்டிற்காக, இந்திய -இலங்கை நட்புறவுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 134 கப் ரக வாகனங்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்காக இந்திய அரசாங்கம் 300 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதுடன், இந்தக் கப் ரக வாகனங்கள் வட மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ச-இ)



## புகையிலைப் பயன்பாட்டால் ஆண்டுதோறும் 20,000 பேர் பலி

புகையிலைப் பயன்பாடு காரணமாக ஆண்டுதோறும் 20,000க்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர் என்று புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அதன் தலைவர் மருத்துவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளதாவது- புகையிலைபயன்பாட்டினால் 200க்கும் மேற்பட்ட நோய்கள் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளன. இந்தச் சிறிய நாட்டிற்குள் புகையிலைப் பயன்பாட்டின் காரணமாக வருடத்துக்கு 22,000 பேர் வரை உயிரிழக்கின்றனர். இலங்கையில் மாத்திரம் 9 முதல் 11 மில்லியன் வரையிலான சிகரெட் பில்டர்கள் சூழலில் விடுவிக்கப்படுகின்றன. இந்த உபயோகிக்கப்பட்ட பில்டர்களில் கடுமையான இரசாயனங்கள் மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் பொருள்கள் அடங்கியுள்ளன. -என்றார். (ச-இ)

நாளை வியாழக்கிழமை- வைகாசி -14
28.05.2026
சுபநேரம் : 07.22 - 08.52
ராகுகாலம் : 01.22- 02.52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கட்டாக்காலி கால்நடைகளால் இரு கிராமங்களுக்குப் பாதிப்பு



## பிரதேசசபையும் அசண்டையீனம்

முல்லைத்தீவு, மே 27

**புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திம்பிலி, கர்ணன் குடியிருப்புப் பகுதிகளில் நீண்டகாலமாகக் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இதுதொடர்பில் பிரதேசசபையிடம் முறையிட்டும் பயனில்லை என்றும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இரு கிராமங்களிலும் கட்டாக் காலிக் கால்நடைகள் நாளாந்தம் வீதிகளில் தங்கி விபத்துகளை ஏற்படுத்துவதுடன், வணிக நிலையங்களைச் சேதப்படுத்தி, விவசாய உற்பத்திகளையும் அழித்துவருகின்றன. இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு, கிராமமக்கள் சார்பில் பிரதேசசபையிடம் மனுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதம் கடந்த நிலையிலும், எந்த நடவடிக்கையும் பிரதேசசபையால் முன்னெடுக்கப்படவில்லை. எனவேசம்பந்தப் பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-19)

# கிளிநொச்சிக் குளத்தில் 18,200 மீன் குஞ்சுகள்

கிளிநொச்சி, மே 27

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன், குளங்களில் மீன் குஞ்சுகளை விடும் திட்டத்தின் கீழ், கிளிநொச்சிக் குளத்தில், 18 ஆயிரத்து 200மீன் குஞ்சுகள் நேற்று விடப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைப்பாளர் மருங்கன் மோகன் மீன் குஞ்சுகளை குளத்துக்குள் விட்டார். இதன்போது தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர் யோ.நிசாந்தன், நீர் உயிரினச் செய்கை விரிவாக்கல் உத்தியோகத்தர் ம.மதுசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-113)



# தையிட்டி போராட்டத்தைக் குழப்ப பொலிஸாரால் பொய்யான வழக்கு

## கஜேந்திரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 27

தையிட்டி போராட்டத்தைக் குழப்பி, விகாரைக்குக் காணியை வழங்கும் நோக்குடன், பொலிஸாரால் பொய்யான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் குற்றஞ்சாட்டி யுள்ளார். பலாலி பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலம் ஒன்றை அளித்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டம் இடம்பெற்றது. இது தொடர்பில் பலாலி பொலிஸார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தனர். அன்று இடம்பெற்ற போராட்டத்தைக் குழப்பும்வகையில் பொலிஸார் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டனர். பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் பொய்யான வழக்கையும் பதிவு செய்தனர். போக்குவரத்துக்கும், பொலிஸாரின் கடமைகளுக்கும் இடையூறு விளைத்துவித்த தாகத் தெரிவித்தே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குக்கு நாங்கள் நீதிமன்றத்துக்கு சமூகம் அளித்த நிலையில், அதுதொடர்பான வாக்குமூலத்தை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வழங்குமாறு நீதிமன்றம் எமக்கு அறிவுறுத்தியது. அதன் பிரகாரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. நாங்கள் இந்தப் போராட்டங்களை ஜனநாயக முறையில், நீதிமன்றக் கட்டளைகளுக்கு மதிப்பளித்து, பொலிஸாரது அறிவுறுத்தல்களுக்கு மதிப்பளித்து நடத்தி வருகின்ற போதிலும், போராட்டத்தை நிறுத்தி சட்டவிரோத விகாரைக்குக் காணியை வழங்கிவிடவேண்டும் என்பதற்காக இனவாதப் பொலிஸாரால் எங்களுக்கு எதிராக அவ்வப்போது வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன- என்றார். (க-27)



# நவீன முறையில் பயிரிடப்பட்ட தக்காளி அறுவடை அமோகம்

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தால், நவீன விவசாய முறையில் மூன்றாவது முறையாகப் பயிரிடப்பட்ட தக்காளி அறுவடை வெற்றியளித்துள்ளது. அலுவலகச் சூழலை பசுமையாக மாற்றுவது, ஊழியர்களுக்கு மனநலன் மற்றும் பணித்திறனை அதிகரிக்கும் சூழலை உருவாக்குவது என்பனவற்றை இலக்காகக் கொண்டு, ஊழியர் நலன்புரிச்சங்கம் பல்வேறு விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அதற்கமைவாக யு.என்.டி.பி. நிறுவனத்தின் City Project நிதிப்பங்களிப்பில், பச்சைவீட்டமைப்பின் கீழ், பிளாட்டினம் வகை தக்காளிச்செடிகள் நவீன விவசாய முறையில் பயிரிடப்பட்டன. இந்த முயற்சி அதிக விளைச்சலைப் பெற்றுக் கொடுத்துள்ளது. கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் இந்த முயற்சியை, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் பசுமை வீட்டு விவசாயத்தை முயற்சிக்க விரும்பும் இளைஞர்கள் நேரில் வருகை தந்து, பச்சை வீட்டு விவசாயம் தொடர்பான தொழில்நுட்பம், செலவீனவருமான கணக்கீடு, பராமரிப்பு முறைகள், கலப்புப் பயிரிடல் செயல்முறைகள் குறித்து நேரில் பார்வையிட்டுக் கற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பண்ணை கடற்கரைப்பூங்கா மற்றும் யாழ்ப்பாண பொது நூலகம் என்பவற்றிற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை உணவக சேவை - 2026

இதன் கீழ் அட்ட வணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் : ரூபா 1,180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் : 01.06.2026 - 17.06.2026 (மு.ப 9.00 -பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்: 18.06.2026 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் : 18.06.2026 .மு.ப 10.05 மணிக்கு

**தகுதிகள் :**
1. உணவக அனுபவம் கொண்டவர்கள்
2. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர்
3 சுகாதார விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுதல்

**நியந்தனைகள் :**
1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
அல்லது மாநகர ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.06.2026 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகமளிக்கலாம்.
3. கேள்வி சமர்ப்பிப்பவர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார்.அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும்.அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில்அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

| இல | விபரம் | குத்தகைக் காலம் | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1. | பண்ணை கடற்கரைப் பூங்கா உணவகம் | 01.07.2026 31.12.2028 | 30,000.00 | 1,884,666.68 |
| 2. | யாழ் பொதுசன நூலக உணவகம் | 01.07.2026 31.12.2028 | 15,000.00 | 1,020,247.25 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமூகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(CR/47601) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. பெரியதம்பி பற்குணராஜா**
(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை
சீமெந்து கூட்டுத்தாபன
பாதுகாப்பு உத்தியோகத்தர்)

ஆண்டுகள் ஐந்து கழிந்தது
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
நீங்கள் இருந்த இடமிங்கே
நிரந்தர வெறுமையாச்சு

தோற்றம்
20.12.1953

மறைவு
03.05.2021

லக்ஸ்மி வாசா
மயிலங்கூடல்,
இளவாலை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/61521) J-1



# மரண அறிவித்தல்



பிறப்பு
14
.
11
.
1932

இறப்பு
25
.
05
.
2026

(CS/61520) J-1

## வல்லிபுரம் தங்கம்மா

வடமராட்சி, கப்புதூவைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கம்மா அவர்கள் கடந்த (25.05.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தவனம் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், நற்குணராசா (லண்டன்), பாக்கியநாதன் (லண்டன்), காலஞ்சென்ற நவலோகநாதன் (பதிலதிபர்), சிவநாதன் (துர்க்கா கிறேசர்), காலஞ்சென்ற மன்மதநாதன், இந்துராணி (லண்டன்), அருள்மதி ஆகியோரின் அன்புத் தாயாரும், உஷாதேவி (ஆசிரியர்), ரோகினி, ஜெகதாம்பாள் (ஓய்வுநிலை ஆசிரியை), தயாநிதி (ஆசிரியை), துரைராஜா (லண்டன்), கமலேந்திரன் (துபாலதிபர்) ஆகியோரின் மாமியாரும், யதுர்ஷன் - சௌமியா, சுவேதா - வினோத், வினுஷன், தர்சியா, நிர்சியா, சேயோன், சத்தியன், துஷாந், துர்க்கா, ஜதுகுலன், கபிசன், தனோபன், கவிஜா, திவியா ஆகியோரின் பேர்த்தியும், கேஷிகாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**அச்செழு, நீர்வேலி.**
**077 844 8775 - சிவா, 076 027 2195 - கமலன்**



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்.
## மேற்பார்வையாளர் தரம் - III பதவி வெற்றிடங்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் - 2026

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அவர்களின் G/NPC/A4/LG/App/LGM/26/01 ஆம் இலக்க 2026.04.16 ஆம் திகதிய மற்றும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களது NP/05/01/Uns/Gen ஆம் இலக்க 2026.04.24 ஆம் திகதிய கடிதங்கள் சார்பாக, உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களின் NP/14/1/ET/Uns/Gen/2025 ஆம் இலக்க 2026.05.04 ஆம் திகதிய கடிதம் மூலம் அறியத்தந்ததற்கமைவாகவும் 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் செயல் வலுப்பெறும் வகையில் வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வட மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான மேற்பார்வையாளர் சேவைக்கான சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும், வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் காணப்படும் கீழ்க்குறிப்பிடப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு PL1 சம்பள அளவுத்திட்டத்தில் நிரந்தர பதவிகளில் கடமையாற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவிப்பெயர் | தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சுகாதார மேற்பார்வையாளர் | III | 01 |
| 02 | சந்தை மேற்பார்வையாளர் | III | 01 |
| 03 | வேலை மேற்பார்வையாளர் | III | 01 |

**பொதுவான தகைமைகள்**

- விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
- திறமையான ஆளுமையும், உடற்தகுதியும், நன்னடத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாமல்விடில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேசசெயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- வயது – வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சேவை நிபந்தனைகள்**

- வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் தொடர்புடைய பதவியில் நிரந்தரமாக கடமையாற்றுவதுடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னரான ஆகக்குறைந்த 5 வருட கால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி, தொழில்சார் தகைமைகள்**

- விண்ணப்பதாரி வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் கடமையாற்றுபவராகவும் PL1 சம்பளத்தொகுதியுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் தமிழ்மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**

- பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இற்கமைவான சம்பளத்தொகுதி MN 1-2025 இற்கு ஏற்ப மேற்பார்வையாளர் தரம் - III பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது 45,230–10x540 – 11x630 – 10x890 – 10x1,190 – 78,360/= ஆகும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

- அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு மேற்பார்வையாளர் நியமனம் வழங்கப்படும்.
  விண்ணப்ப முடிவுத் திகதி : 10.06.2026

**விண்ணப்பிக்கும் முறை :**

- வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தானப்பகுதியில் 2026.05.27 ஆம் திகதி முதல் உரிய விண்ணப்ப படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு விண்ணப்ப முடிவுத்திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியவாறு செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்யும் போது சரியான தகவல்கள் அளித்தல் வேண்டும். நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**சண்முகராஜா பாலரூபன்,**
**செயலாளர்.**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

(CR/47598) J-1

27.05.2026



# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
22
•
08
•
1949



விண்ணில்
27
•
05
•
2021


## Dr. ஆ.நடராசா சுதேச வைத்தியசாலை
### வைத்திய கலாநிதி
## நடராசா கிருஸ்ணராசா

சிரித்த முகத்துடன்
சிந்தை மகிழ்ந்திட
சீர் பெற்ற சித்த வைத்தியனாய்
சீலத்தில் உலா வந்த நீங்கள்
எம் மனதில் மட்டுமே உலா வர
தொடங்கி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன
காலங்கள் மாறலாம்
காட்சிகள் மாறலாம்
உங்கள் கனவுகள் என்றுமே மாறாது
நாங்கள் கலங்குகின்றோம் கண்ணீரை துடைக்கிறோம்
கடமை அழைக்கின்றது தொடரும் உங்கள் வைத்திய சேவை
ஓம் சாந்தி !

(CS/61516) J-1

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



யாழ்ப்பாணம் இந்தியத்துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய மாணவர்களுக்கு, யோகாக் கலைப் பயிற்சிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (க)

# லைப் லைன் நிறுவனத்தால் மன்னாருக்கு நிவாரண உதவி





மன்னார், மே 27

சவுதி அரேபியாவைச் சேர்ந்த இரு கொடையாளிகளின் நிதிப்பங்களிப்பில், மன்னார் மாவட்டத்தில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப்பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் கீழ் இயங்கும், லைப் லைன்(life Line) தொண்டு நிறுவனத்தின் ஊடாக உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன. நானாட்டான் மற்றும் முசலி பகுதிகளைச் சேர்ந்த, புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.

குறிப்பாக படுக்கை நோயாளிகளுக்கான விசேட மருத்துவக் கட்டில்கள், பள்ளிவாசல்களுக்கான கம்பளிகள், தற்காலிகக் கூடாரங்களில் தங்கியிருப்போருக்கு தறப்பாள்கள் என்பன வழங்கப்பட்டன. நிகழ்வில், லைப் லைன் அமைப்பின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், உலமாக்கள் மற்றும் மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (க-56)



தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர் இராஜசேகரம் (அவுஸ்ரேலியா) தனது பெற்றோர் மயில்வாகனம், சௌந்தரியம்மா ஆகியோர் நினைவாக, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு செய்மதி இணைய உபகரணத் தொகுதியை வழங்கியுள்ளார். உபகரணத் தொகுதி முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரனிடம், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் மாவட்டச் செயற்பாட்டாளர்களால் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. (க-19)

# சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் 10 மாணவர்களுக்குச் சைக்கிள்

முல்லைத்தீவு, மே 27

சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 10 மாணவர்களுக்கு, புதிய துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று, துவிச்சக்கரவண்டிகளை மாணவர்களுக்கு வழங்கினார். (க-66)



# லண்டன் வாழ் உறவுகளால் சிவாஜிலிங்கத்துக்கு உதவி



யாழ்ப்பாணம், மே 27

சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சையை எதிர்நோக்கியுள்ள மூத்த அரசியல்வாதி எம். கே. சிவாஜிலிங்கத்துக்கு 'ஒற்றுமையே பலம்' லண்டன் வாழ் ஆதிகோவிலடியைச் சேர்ந்த உறவுகளால், ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த உறவுகள் குறித்த நிதியை நேற்றுமுன்தினம் நேரில் சென்று வழங்கினர். (க-100)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான MUF - 13 ஆம் இலக்க கடையை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்வி மனு கோரலுக்கான அறிவித்தல் - 2026

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 27.05.2026 தொடக்கம் 09.06.2026 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 10.06.2026 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 10.06..2026 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

கேள்விஅட்டவணை
நவீன சந்தை கடைத்தொகுதி (மேல்மாடி சந்தை உட்புறம்)

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| MUF-13 | ரூபா 1,260,000.00 | ரூபா 5,250.00 | ரூபா 18,900.00 | ரூபா. 2,000.00 |

**நியந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும், கிராம உத்தியோகத்தரால் வழங்கப்படும் குணநலச்சான்றிதழுடனும் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "தவிசாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் " என்ற முகவரிக்கு 2026.06.10 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு விண்ணப்ப படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், சித்திபெறும் விண்ணப்பதாரிக்கு குறித்த கடை வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபையின் தவிசாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**
**27.05.2026**

(CR/47600) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீ வாழ்க்கையில் முன்னேற
வேண்டுமானால் உன்னுடைய
கால்களால் நடந்துபோ.
மற்றவர்களின் முதுகின்மேல்
ஏறிப்போக விரும்பாதே.


-நியேட்சே

புதன் பொய்கை

27.05.2026
புதன்கிழமை

# சுண்டிக்குளியில் உயிர்பெற்ற 'மம்மிகள்'

■ கோ.ருஷாங்கன்






## ஆங்கில அரங்கில்
### ஒரு வரலாற்றுப் பாய்ச்சல்!

யாழ்ப்பாணத்தின் அண்மைக்கால மேடை நாடக வரலாற்றில், ஒரு பாடசாலை விழாவின் ஆற்றுகை இத்தனை பெரிய அதிர்வையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் ஆங்கில தின விழாவில் அரங்கேறிய அந்த எகிப்திய வரலாற்றுத்துளிகள், அரங்கு நிறைந்திருந்த பார்வையாளர்களை அப்படியே 'நைல் நதிக்கரைக்கே' அழைத்துச் சென்றிருந்தது.




**மம்மிகளின் மர்மமும் துட்டன்காமனின் வரலாறும்**

எகிப்திய வரலாற்றில் கி.மு. 1342இல் அரியணை ஏறி, மிக இளவயதிலேயே (19 வயது) மறைந்த மன்னன் துட்டன்காமனின் கதையே இந்த நாடகத்தின் கருப்பொருள். நீண்டகாலம் 'மம்மி' வடிவில் வரலாற்றின் இருளில் புதைந்து கிடந்த துட்டன்காமனின் இரகசியங்களை 1922இல் ஹோவர்ட் கார்ட்டர் மற்றும் ஜார்ஜ் ஹெர்பர்ட் ஆகியோர் எப்படிக் கண்டுபிடித்தார்கள் என்பதை மிக நேர்த்தியான நாடக நுட்பங்களுடன் மாணவியர் மேடையேற்றினர்.

**பார்வையாளரை உறைய வைத்த அரங்க நுட்பங்கள்**

நாடகத்தின் ஆரம்பமே ஒரு மெய்சிலிர்க்கும் அனுபவம். ஆய்வாளர்களான ஹோவர்ட் கார்ட்டர் குழுவினர், பார்வையாளர் பக்கமிருந்து கையில் விளக்குகளை ஏந்தி, பாடல்களைப் பாடியபடி வரலாற்றைத் தேடி மேடையை நோக்கி வருவது. அவர்கள் மேடைக்குள் நுழையும்போது இருள் விலகி மெல்லத் திரை விரிந்து, எகிப்திய மம்மிகள் நிறைந்த மேடை வெளிச்சம் பெறுவது என ஒவ்வொரு காட்சியும் உலகத்தரம் வாய்ந்த ஒரு சினிமா அனுபவத்தைத் தந்தது.

**நாடகத்தின் ஓட்டம் ஆடல் மற்றும் பாடல்களால் மிக லாவகமாக நகர்த்தப்பட்டது:**

துட்டன்காமன் உயிர்பெற்று வரும் காட்சியில், கறுப்பு ஆடை அணிந்த மங்கையரின் விறுவிறுப்பான மற்றும் அச்சமூட்டும் நடனம் பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்கே கொண்டுவந்தது. அடுத்த கணமே, வெண்ணிற ஆடை அணிந்த தேவதைகளின் மென்மையான அசைவுகள், மிரண்டு போயிருந்த பார்வையாளர்களை வருடி மகிழ்வித்தது.

ஆற்றல் வரம்புகளைக் கடந்த உழைப்பு மாணவியரின் ஆங்கிலப் பேச்சாற்றல், தேர்ந்த நடிப்பு, பாடல் வல்லமை என அனைத்தும் ஒருங்கிணைந்து ஒரு முழுமையான படைப்பாக மிளிர்ந்தது.

இதற்குப் பின்னால் இருந்த காட்சி வடிவமைப்பு, ஆடை அலங்காரம் மற்றும் ஒப்பனை ஆகியவை அண்மைக்கால யாழ்ப்பாண மேடைகளில்நாம் கண்டிராத ஒரு கலைப்புரட்சி. இந்த மாபெரும் வெற்றிக்கு வித்திட்டவர் கல்லூரியின் ஆசிரியை அனுலோஜா. நாடகத்தை எழுதி, திட்டமிட்டு, இசை, ஆடல், பாடல் எனப் பன்முகத் திறமைகளை ஒருங்கிணைத்த அவரது உழைப்பு பாராட்டுக்குரியது. அவருக்குத் தோள் கொடுத்த சக ஆசிரியர்கள், துணிச்சலாக மேடையேறிய மாணவியர் மற்றும் இந்த ஆக்கபூர்வமான என முழுக்குழுவுமே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

**கலை மறைக்கப்படக்கூடாது!**


சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு 90களில் 'குழந்தை ம.சண்முகலிங்கத்தின்' நாடகங்களை மேடையேற்றிய நீண்ட பாரம்பரியம் உண்டு. அந்தத் தொடர்ச்சியில், தற்போது ஆங்கில நாடகத்துறையிலும் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளனர். மே 22ஆம் திகதி அரங்கேற்றப்பட்ட இந்த 'துட்டன்காமன்' நாடகம், அந்த ஒரு பொழுதோடும் முடிந்துவிடக்கூடாது. இந்த அற்புதப் படைப்பை யாழ்ப்பாணத்தின் ஏனைய மாணவர்களும், பொதுமக்களும் காணும் வகையில் மீண்டும் பொது மேடைகளில் அரங்கேற்றவேண்டும். பழைய மாணவியர் சங்கம், மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறையினர் ஒன்றிணைந்து, நம் மண்ணின் இந்தக் கலைச்செழுமையை உலகறியச் செய்ய முன்வரவேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்பித்தற் தொழில்நுட்பத்தில் எண்ணிம அறிவின் முக்கியத்துவம்

கடந்தவாரத் தொடர்ச்சி......................



○ நடேசு தயாளன்
(அதிபர், கோண்டாவில் இந்துக் கல்லூரி)

எண்ணிம எழுத்தறிவுக்கான உள்ளடக்கங்களாகப் பின்வருவன உள்ளன. செயலி களை இயக்கும் திறன் இங்கு வன்பொருள்மென்பொருள்என்பவற்றினை க் கையாளும் திறன் மிகவும் அவசியமானதாகும். கணனி மென்பொருள் கைத்தொலைபேசி மென்பொருள் தொடர்பிலான அறிவு விமர்சனச் சிந்தனையும் மதிப்பீடும் டிஜிற்றல் மீடியா எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதோடு நிகழ்நிலைத் தகவல்களின் சரியான தன்மை அவற்றின் செயற்பாடு தொடர்பிலான அறிவு தகவல் முகாமைத்துவம் டிஜிற்றல் சூழலில் தகவல்களை இனங்காணலும் சேமித்தலும் என்பதோடு அதனைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தலும் அவசியமானதாகும். தொடர்பாடலும் கூட்டிணைவும் பாதுகாப்பான முறையில் அடிப்படையில் சமூக வலையமைப்புகளைப் பயன்படுத்தும் திறன் என்பன வளர்க்கப்பட வேண்டும்.

எண்ணிமப் பாதுகாப்பும் சுய தகவலைப் பாதுகாத்தலும் பாதுகாப்பான நிகழ்நிலை நடத்தையினூடாக அதனைச் செயற்பாட்டுக்கு உட்படுத்தும் திறனும் தகவல்களை மதிப்பாய்வு செய்யும் திறனும் எண்ணிம உபகரணங்களையும் அதன் மென்பொருள்களையும் கையாளும் திறனும் உள்ளடக்கங்களை இனங்காணலும் அதன் சமூகப் பயன்பாட்டு நிலையினை அறிந்து தொழில்நுட்பத்துடன் ஒன்றினைந்து செயற்படும் திறன்களையும் பெற்றவர்களாக கற்போன் வளர்க்கப்படல் அவசியமானதாகும். எண்ணிம எழுத்தறிவுத் திறனின் பிரதான கூறாக இணையத்தொடர்பினை மேற்கொள்ளும் திறன் இணையக் கலாசாரத்தினைச் சரியான முறையில் இனங்காணும் திறன் எண்ணிமத் தொடர்பாடல் தொடர்பிலான விமர்சனப்பாங்கான மதிப்பீடு பிரச்சினை தீர்க்கும் திறன் பொருத்தமான உள்ளடக்க மதிப்பீடு பாதுகாப்பு என்பதாகவுள்ளது. பாரம்பரியமான கற்றல் கற்பித்தல் முறையில் இருந்து விடுபட்டு வளம்மிக்க பயனான கற்றலினை மேற்கொள்ள தொழில்நுட்பப் பயன்பாடு அவசியமானதாகும். கற்றல், கற்பித்தலில் மாணவர்க்குமிடையில் இடைவினையுறவினை வளர்த்துக்கொள்ளவும் இது உதவுகின்றது.

கற்றலில் மாணவர்களின் ஈடுபாட்டினை அதிகரிக்கவும் இது வழிவகுக்கின்றது. கூட்டிணைவான செயற்பாட்டினை அதிகரிக்கவும், நவீன கற்பித்தலுக்கு உதவவும் மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டி னை மேம்படுத்தவும் எண்ணிமம் முதல் என்ற செயல் உலகில் மாணவர்கள் வாழ வழிசெய்வதற்கும் ஆசிரியருக்கு டிஜிற்றல் அறிவு அவசியமானதாகும். பொருத்தமான டிஜிற்றல் கருவி களைத் தெரிவு செய்யவும், பாதுகாப்பானதும் ஒழுக்கம் மிக்கதுமான வழியில் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தும் திறனினைப் பிள்ளையிடம் ஏற்படுத்திக் கொடுக்கவும் ஆசிரியருக்கு இந்த அறிவு அவசியமானதாகும். விமர்சன முறையில் நிகழ்நிலைத் தரவுகளைப் பதிவு செய்யவும் இத்திறன் வளர்க்கப்படவேண்டும். தனிப்பட்ட கற்றல் செயன்முறையினை மேற்கொள்ளவும் பாதுகாப்பானதும் கணனிக் குற்றச்செயல்களில் இருந்து பாதுகாப்புப் பெறக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளவும் கிடைக்கப் பெறும் தகவல்களை ஒழுக்க விதிமுறைகளைப் பின்பற்றவும் எண்ணிமத் தொழில்நுட்பத் தெரிவின் தாக்கங்களைத் தெரிந்துகொள்ளவும் இது அவசியமான தாகும். டிஜிற்றல் உலகில் விமர்சனப் பாங்கில் பரிசீலனை செய்யவும் அதன் நம்பகத்தன்மை தொடர்பிலான அறிவினைப் பெற்றுக்கொடுக்கவும் ஆசிரியர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு அவசியமானதாகும். மேலும் எதிர்கால வேலையுலகில் அனைத்துத் துறைகளிலும் எண்ணிமத் தொழில்நுட்ப அறிவு அவசியமானதாகும். அத்தகைய அறிவினைப் பிள்ளைக்குப் பெற்றுக் கொடுக்கவும் ஆசிரியர் இதுதொடர்பான தெளிவு உடையவராக விளங்கவேண்டியுள்ளது. எண்ணிமத் தொழில்நுட்ப அறிவானது அறிவு செயலாற்ற ஆசிரியர் வினைத்திறனுடன் வெளிக்காட்டலுக்கும் வழிசமைப்பதாகவுள்ளது. வழிசமைப்பதுடன் வாண்மைத்துவ ஆசிரியரானவர் தொடர்புபடுத்துபவராக நடுநிலையாகச் செயற்பட்டு மாணவர்களிடம் திறன்களை இது வளர்ப்பதன் மூலம் கற்றலில் சம சந்தர்ப்பத்தினை வளர்க்கவும் முடிகின்றது என்பதோடு, நெகிழ்ச்சியான கற்றல் இலக்குகளைத் தனியாளிடம் கொண்டுசெல்லவும் வழிசமைகின்றது.

எண்ணிமக்கற்றல் முறையானது கற்போனுக்கு இதுவரை காலமும் இருந்து வந்த புவியியல் உலகின் எப்பாகத்தில் இருந்தும் கற்றலுக்கான வாய்ப்பினைப் பெறுவதற்கான தடைகளை நீக்குவதோடு புதிய வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளப் பங்காற்றுவதாகவுள்ளது. மேலும் சமநிலையான கற்றலுக்கும் நெகிழ்வுப்போக்கான கற்றலுக்கும் வாய்ப்பளிப்பதாகவுள்ளது. கற்போனைப் பொறுத்தவரையில் செலவு நன்மையினை செலவு நிலையில் இருந்து விடுபடவும் பாரம்பரிய முறையிலுள்ள ஏற்படுத்தவும் வழிசமைக்கின்றது. கற்போனுக்கு தனது கற்றல் தொடர்பான பின்னூட்டல் உடனடியாகக் கிடைப்பதனால் கற்றலில் தனது அடைவு தொடர்பாக உடனடியாக அறிந்து கொள்ளவும் பற்றி கொள்ளவும் வாய்ப்பு தனது பின்னடைவுகள் இது ஏற்படுகின்றது. மட்டுமன்றி தெரிந்து விரைவாகத் கற்போருக்கிடையிலான இடைவினையுறவினையும் வளர்த்துக் கொள்ள முடிகின்றது என்பதோடு முடிகின்றது. டிஜிற்றல் உலகளாவிய ரீதியிலான் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள முறையினூடாகக் காகிதத்தின் பயன்பாடு கற்றலுக்கான அடிப்படைக் கட்டுமானங்கள் அதிகளவில் வேண்டப்படாதுள்ளதால் சூழல் பாதுகாப்பும் ஏற்படுகின்றது வேலையுலகத் தேவைக்கேற்ப வாழ்க்கை நீடித்த கல்வி என்ற எண்ணக்கருவை கற்றலைத் தொடர்ந்து மேற் கொள்வதற்கும்பூர்த்தி செய்து கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

எண்ணிம முறையிலான கற்றலானது கற்போனின் கற்றலை மேலெழச் செய்கின்றது என்பதற்கப்பால் கலாசார ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தவும் இதனடிப்படையில் நோக்குகின்ற போது வழி சமைக்கின்றது. எண்ணிம முறையிலான கற்றலானது எதிர்காலச் சந்ததியினரைச் செழுமைப்படுத்துவதாகவுள்ளது. ■

## சந்ததி பெருங்கனவு ஈழத்தின் நினைவில்

போரின் புகையினுள்
பிறந்த குழந்தைகள் நாம்
தாலாட்டாகக் கேட்டது
தாயின் குரல் மட்டும் அல்ல —
வெடிகுண்டின் அதிர்வும்

கரைந்த வீடுகளின் சாம்பலில்
காலடி வைத்தபடியே
ஒரு தலைமுறை வளர்ந்தது
ஆனால்,
சிதைந்த சுவர்களுக்குள் கூட
சாகாத ஒன்று இருந்தது —
சந்ததியின் பெருங்கனவு

“எங்கள் பிள்ளைகள்
இனி ஓடிக் கற்கக்கூடாது,
அச்சத்தில் உறங்கக்கூடாது”
என்ற ஒவ்வோர் அம்மாவின்
மௌனப் பிரார்த்தனை
ஈழத்தின் உயிர்த்துடிப்பு

கடலில் கரைந்தவர்களின் பெயர்கள்,
மண்ணில் புதைந்தவர்களின் நினைவுகள்,
இன்னும் காற்றில் அலையும்
காணாமற்போன முகங்கள் —
அனைத்தும் சேர்ந்து
ஒரே கனவைச் சொல்கின்றன

“நாம் இழந்த வாழ்வை
எங்கள் சந்ததி மீட்டெடுக்க வேண்டும்”


போர் எங்கள் நிலத்தை எடுத்திருக்கலாம்,
ஆனால்
எங்கள் பிள்ளைகளுக்கான கனவுகளை
எடுக்க முடியவில்லை

அதனால் தான்
இன்றும் ஒரு தந்தை
மகனின் புத்தகத்தைத் திறக்கும் போது,
ஒரு தாய்
மகளின் நெற்றியில் முத்தமிடும் போது,
அவர்கள் உள்ளத்தில் ஒலிப்பது —

“நீங்கள் வாழவேண்டும்...
நாங்கள் வாழமுடியாத உலகத்தை”


ஈழம் என்பது
ஒரு நிலத்தின் பெயர் மட்டும் அல்ல
தன் சந்ததி சுதந்திரமாக
சிரிக்கவேண்டும் என்று
இன்னும் கனவு காணும்
ஒரு இனத்தின் இதயம்.

ஞா. கஜனன்
வைரவப்புளியங்குளம்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 21–ஆம் நூற்றாண்டு கல்வி: அறிவாற்றல் மற்றும் கட்டுருவாக்கக் கற்றல் கொள்கைகளின் ஒரு புதிய பரிமாணம்



ச. பரமேசன்
(ஆசிரியர், கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை)

கற்றல் என்பது ஒரு தேக்கநிலை அடைந்த குளம் அல்ல; அது ஓடிக் கொண்டே இருக்கும் ஒரு ஜீவநதி. நவீனக் கல்வியியல் சூழலில், கற்றல் என்பது வெறும் தகவல்களைத் தலையில் ஏற்றும் சுமையல்ல; அது அறிவு, திறன், நடத்தை மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றைத் தொடர்ந்து புதுப்பிக்கும் ஒரு உயிருள்ள செயல்முறை. இத்தகைய புரட்சிகரமான சிந்தனைக்கு வித்திட்டவர்கள் உளவியல் அறிஞர்களான ஜீன் பியாஜே, லெவ் விகொட்ஸ்கி மற்றும் ஜெரோம் புரூனர் ஆவர். இவர்களின் கோட்பாடுகளே இன்றைய 'மாணவர் மையக்கல்வி' எனும் மாளிகைக்கு வலுவான அஸ்திவாரங்களாகத் திகழ்கின்றன.

**ஜீன் பியாஜேயின் அறிவாற்றல் விருத்திக்கொள்கை: அறிவின் உள்ளகக் கட்டமைப்பு**



ஜீன் பியாஜே ஒரு மிக முக்கியமான உண்மையை உலகிற்குச் சொன்னார்: 'குழந்தைகள் சிறிய மனிதர்கள் அல்ல; அவர்களின் சிந்தனை முறை பெரியவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டது' ஒரு குழந்தை பிறக்கும் போது அதன் மனம் ஒரு 'வெற்றுப் பலகை' (Tabula Rasa) அல்ல. மாறாக, தாய்ப்பால் உறிஞ்சுதல் போன்ற சில அடிப்படை உளத்திறனமைப்புகளுடன் (Schemas) அது பிறக்கிறது.

புதிய தகவல்கள் வரும்போது மனித மனம் அதனை எவ்வாறு கையாள்கிறது என்பதை பியாஜே நான்கு நிலைகளில் விளக்குகிறார். பழைய அறிவோடு புதிய தகவலைச் சேர்ப்பது **'தன்மயமாக்கல்'** என்றும், பழைய அறிவு போதாதபோது புதிய மன வடிவமைப்பை உருவாக்குவது **'தன்னமைவாக்கல்'** என்றும் அழைக்கப்படுகிறது. இவையிரண்டும் இணையும்போதுதான் ஒரு குழந்தை சூழலுக்கேற்பத் தன்னை மாற்றிக்கொண்டு அறிவுச் சமநிலையை அடைகிறது. இந்தச் செயல்முறைதான் 21ஆம் நூற்றாண்டின் 'செயல்வழிக் கற்றலுக்கு' அடிப்படையாக அமைந்தது.

**வளர்ச்சியின் பருவங்களும் கற்பித்தல் உத்திகளும்**

பியாஜே குழந்தைகளின் வளர்ச்சியை நான்கு கட்டங்களாகப் பிரிக்கிறார். பூச்சியம் முதல் இரண்டு வயது வரையிலான **புலனியக்கப் பருவத்தில்,** தொடுதல் மற்றும் பார்த்தல் மூலமே கற்றல் நிகழ்கிறது. 2-7 வயது வரையிலான தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தில், குழந்தைகளுக்குக் கதைகள் மற்றும் நாடகங்கள் மூலம் குறியீட்டு முறையில் கற்பிக்கவேண்டும்.

7-12 வயது வரையிலான **தூல சிந்தனைப் பருவத்தில்,** மாணவர்கள் தர்க்கரீதியாகச் சிந்திக்கத் தொடங்கினாலும், அவர்களுக்கு நேரடி அனுபவங்களும் கற்றல் உபகரணங்களும் அவசியமாகின்றன. இறுதியாக, 12 வயதுக்கு மேற்பட்ட **நியமசிந்தனைப் பருவத்தில்** மட்டுமே மாணவர்களால் தத்துவார்த்தமான மற்றும் கற்பனை நிலைகளை ஆய்வு செய்யமுடிகிறது. இம்முறைப்படி, மாணவர்களின் வயது மற்றும் முதிர்ச்சிக்கு ஏற்பக் கற்றல் முறைகளை வடிவமைப்பதே 21ஆம் நூற்றாண்டின் 'தனிப்பயன் கல்வி' ஆகும்.

**விகொட்ஸ்கியின் சமூகக் கட்டுருவாக்கம்: பிறருடன் இணைந்து கற்றல்**



பியாஜே கற்றலை ஒரு தனிநபர் சார்ந்த அறிவுத் தேடலாகப் பார்த்த போது, லெவ் விகொட்ஸ்கி அதனை ஒரு சமூகச் செயல்முறையாக விளக்கினார். ஒரு மாணவர் தனியாகச் செய்யக்கூடிய நிலைக்கும், ஒரு சிறந்த வழிகாட்டியின் உதவியுடன் அடையக்கூடிய நிலைக்கும் இடையிலான இடைவெளியை **'அண்மை விருத்தி வலயம்'** என்கிறார் விகொட்ஸ்கி.

இங்குதான் **'ஆதரவு முறை'** என்னும் உத்தி முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு கட்டடம் கட்டும்போது அமைக்கப்படும் தற்காலிகச் சாரத்தைப் போல, மாணவர் ஒரு புதிய திறனைக் கற்கும்வரை ஆசிரியர் தற்காலிகமாக ஆதரவு வழங்குவார். மாணவர் அத்திறனைப் பெற்றதும், அந்த ஆதரவு மெதுவாகக் குறைக்கப்பட்டு, மாணவர் சுயமாகச் செயற்பட விடப்படுவார். இது இன்றைய காலப்பகுதியில் 'கூட்டுக் கற்றல்' மற்றும் 'சக மாணவர் வழிகாட்டல்' (Peer Tutoring) போன்ற முறைகளுக்கு உயிர் கொடுத்துள்ளது.

**ஜெரோம் புரூனரின் கண்டுபிடிப்புக் கற்றலும் சுழல் பாடத்திட்டமும்**



ஜெரோம் புரூனர், கற்றலை ஒரு 'கண்டுபிடிப்பு' என்கிறார். தகவல்களை அப்படியே வழங்குவதை விட, மாணவர்களே கேள்விகளை எழுப்பித் தீர்வுகளைக் கண்டடைய ஆசிரியர் வழிகாட்டியாக இருக்கவேண்டும். இவரது மற்றொரு சிறப்பான பங்களிப்பு **'சுழல் பாடத்திட்டம்'** ஆகும். ஒரு சிக்கலான கருத்தை ஒரே நாளில் முழுமையாகக் கற்பிக்காமல், மாணவரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப மீண்டும் மீண்டும், ஆனால் ஒவ்வொரு முறையும் இன்னும் ஆழமாகப் புகட்டுவதே இதன் சாரமாகும். புரூனர் கற்றலை மூன்று பிரதிநிதித்துவ நிலைகளாகப் பிரிக்கிறார்:

**. செயற்பாட்டு நிலை (Enactive): அனுபவங்கள் மூலம் கற்றல்.**
**. படிம நிலை (Iconic): படங்கள் மூலம் கற்றல்.**
**. குறியீட்டு நிலை (Symbolic): மொழி மற்றும் எண்கள் மூலம் உயர்ந்த சிந்தனையைப் பெறுதல்.**

**21ஆம் நூற்றாண்டின் '4Cs' திறன்கள்**

தொகுத்துப் பார்த்தால், இந்த மூன்று அறிஞர்களின் கொள்கைகளும் இணைந்து 21ஆம் நூற்றாண்டு மாணவர்களுக்குத் தேவையான நான்கு முக்கியமான திறன்களை (4Cs) வளர்க்கின்றன: **விமர்சனச் சிந்தனை (Critical Thinking), படைப்பாற்றல் (Creativity), கூட்டுறவு (Collaboration) மற்றும் தொடர்பாடல் (Communication).** இன்றைய டிஜிற்றல் கற்றல் சூழலிலும், செயற்கை நுண்ணறிவு சார்ந்த கல்வி முறைகளிலும் இந்த அடிப்படை உளவியல் கோட்பாடுகளே 'தனித்துவமான கற்றலை' உறுதி செய்கின்றன. மாணவர்களை வெறும் 'கேட்பாளர்களாக' வைத்திருக்காமல், அவர்களை 'ஆய்வாளர்களாக' மாற்றும் இந்தப் பயணமே, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் வலிமையான தலைமுறையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்

பகுதி - 06

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்டு பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக தொழிற்றுறையில் குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்பு பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி தொற்றுநோயியல் ஆராய்ச்சி கல்வியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

## பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு


முதலில், பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு (Distributed AI) என்ற கருத்தைப் பரிசீலிப்போம். பாரம்பரிய செயற்கை நுண்ணறிவு அணுகுமுறைகளில், ஒரு மைய அமைப்பு (central system) அல்லது ஒரு முக்கியமான கணனி முழு அமைப்பையும் கட்டுப்படுத்தும். ஆனால் பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவில், நுண்ணறிவு என்பது ஒரே இடத்தில் குவிந்திருக்காது; மாறாக, பல சிறிய அமைப்புகள், புத்தினிகள் (agents), அல்லது கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுவதன் மூலம் நுண்ணறிவு உருவாகிறது அல்லது நிர்வகிக்கப்படுகிறது. இதன் கீழ் பல்புத்தினி அமைப்புகள் (Multi-agent systems), பரவலாக்கப்பட்ட இயந்திரக்கற்கை (distributed machine learning), பெருங்கூட்ட நுண்ணறிவு (swarm intelligence), செயற்கை நோயெதிர்ப்புத் தொகுதிகள் (artificial immune systems) மற்றும் கூர்ப்பு அல்கோரிதம்கள் (evolutionary algorithms) போன்ற பல அணுகுமுறைகள் வருகின்றன. இத்தகைய அமைப்புகளில், ஒவ்வொரு கூறும் மிக எளிய உள்ளூர்த் தகவல்களை (local data) மட்டுமே அறிந்திருந்தாலும், அவை ஒன்றிணைந்து மிகச் சிக்கலான பரும்போக்கு நடத்தைகளை உருவாக்குகின்றன. பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவில் மிகவும் பிரபலமான அணுகுமுறைகளில் ஒன்று எறும்புக் கூட்ட உச்சப்படுத்தல் (Ant Colony Optimization - ACO) ஆகும். உண்மையான எறும்புகள் உணவைத் தேடும் போது pheromone எனப்படும் இரசாயனத் தடங்களைத் தாம் செல்லும் பாதைகளில் விட்டுச் செல்கின்றன. உணவுக்குச் செல்லும் பயனுள்ள பாதைகள் அதிக எறும்புகளால் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதால் அந்தத் தடங்கள் வலுப்பெறுகின்றன; பயனற்ற பாதைகள் காலப்போக்கில் மறைந்து விடுகின்றன. இதே கருத்தைக் கணனி அறிவியலில் பயன்படுத்தும்போது, பல சிறிய 'செயற்கை எறும்புகள்' உள்ளூர்த் தகவல்களைப் பயன்படுத்திப் பாதைகளைத் தேடி, சிறந்த இணைப்புகள் அல்லது உச்சப்படுத்தப்பட்ட தீர்வுகளைப் படிப்படியாக உருவாக்குகின்றன. இங்கே முக்கியமானது, எந்த மையக் கட்டுப்படுத்தியும் இல்லாமல், பல எளிய கூறுகளின் உள்ளூர்த் தொடர்புகளிலிருந்து திறமையான மொத்த அமைப்பு உருவாகிறது என்பதே ஆகும்.




இந்தப் பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுக் கருத்துக்களை விளக்குவதற்காக, CSIRO-NASA Ageless Aerospace Vehicle (AAV) செயற்றிட்டத்தை ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தலாம். CSIRO என்பது அவுஸ்திரேலியாவின் முதன்மை ஆராய்ச்சி நிறுவனமான Commonwealth Science and Industrial Research Organization என்பதாகும். NASA என்பது National Aeronautics and Space Administration எனப்படும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் என்பது பலரும் அறிந்ததே. குறிப்பிடப்பட்ட இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கம், நீண்டகால விண்வெளிப் பயணங்களில் அல்லது ஆபத்தான விண்வெளிச் சூழல்களில் சேதமடையக்கூடிய விண்கலங்கள் எவ்வாறு தங்களைத் தாமே கண் காணித்து, சேதத்தைக் கண்டறிந்து, தம்மைத்தாமே மனிதத் தலையீடு இன்றித் திருத்திக்கொண்டு தொடர்ந்து செயற்படமுடியும் என்பதைக் கண்டறிவதாகும். விண்வெளியில் நுண் விண்கற்கள் (micro-meteoroids), சுற்றுப்பாதை உடைபொருள்கள் (orbital debris), அல்லது சிறிய துகள்கள் கூட விண்கலத்தின் மேற்பரப்பில் சேதத்தை உருவாக்கக் கூடும். பாரம்பரிய அமைப்புகளில் இத்தகைய சேதம் மையக்கட்டுப்பாட்டு அமைப்பைப் பாதித்தால் முழு அமைப்பும் செயலிழக்கலாம். ஆனால் AAV அணுகுமுறையில், sensing, communication, மற்றும் processing ஆகியவை முழு விண்கல மேற்பரப்பிலும் பகிர்ந்து வைக்கப்படுகின்றன. AAV அமைப்பில், விண்கலத்தின் மேற்பரப்பு பல சிறிய கலங்களால் (cells) ஆன ஒரு "smart skin"-அதாவது மனிதத் தோல்போன்ற ஒரு அமைப்பு-போலக் கருதப்படுகிறது. ஒவ்வொரு கலத்திலும் sensors, சிறிய processing திறன், மற்றும் அண்டைக் கலங்களுடன் தொடர்புபடும் communication links ஆகியவை உள்ளன. இந்த அமைப்பைப் படத்தில் காண்க. முக்கியமாக, எந்தக் கலத்திற்கும் முழு விண்கலத்தின் மொத்த நிலைமை தெரியாது; ஒவ்வொரு கலமும் தன்னையும் தன் அண்டைக் கலங்களையும் பற்றிய தகவல்களை மட்டுமே அறியும். இருந்தாலும், இக்கலங்களுக்கிடையேயான உள்ளூர்த் தொடர்புகளின் மூலம் பெரிய அளவிலான அமைப்புகள் உருவாகின்றன. இதுவே பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவின் மையக் கருத்தாகும்: மிக எளிய உள்ளூர் விதிமுறைகள், மொத்த அமைப்பில் மிகவும் புத்திசாலித்தனமான நடத்தைகளை உருவாக்க முடியும் என்பது இத்துறையின் மையக்கருத்து ஆகும். AAV செயற்றிட்டத்தில் மிகவும் முக்கியமான கருத்துகளில் ஒன்று தானாக ஒழுங்கமைக்கும் சேத எல்லைகள் (self-organizing impact boundaries) ஆகும். விண்கலத்தின் ஒரு பகுதி தாக்கத்தால் சேதமடைந்தால், சில கலங்கள் முற்றிலும் அழிந்து போகலாம்; சில கலங்கள் பகுதியளவில் செயலிழக்கலாம்; சில கலங்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கலாம். இந்நிலையில், அண்டைக் கலங்கள் தங்களது நிலையை மாற்றி, சேதமடைந்த பகுதியைச் சுற்றி ஒரு எல்லை அமைப்பை உருவாக்குகின்றன. இந்த எல்லை, உயிரியலில் காயங்கள் ஆறல் அல்லது திசு பழுதுபார்த்தலை ஒத்ததாகும். இப்படியான எல்லை ஒன்று விண்கலத்தின் தோலில் உருவாதலைப் படத்தில் காண்க. இங்கே முக்கியமானது, இந்த எல்லையை யாரும் இருந்து "வரைவதில்லை"; மாறாக, உள்ளூர்க் கலங்களின் தொடர்பாடலிலிருந்து அது தானாக உருவாகிறது என்பதே ஆகும்.

இந்த self-organizing impact network, முன்னர்

Self-organising impact networks: connecting impact points



M. Prokopenko, P. Wang, D.C. Price, P. Valencia, M. Foreman, A.J. Farmer. Self-organising hierarchies in sensor and communication networks. Artificial Life, 11(4), 407-426, 2005.

M. Prokopenko, P. Wang, M. Foreman, P. Valencia, D.C. Price, G.T. Poulton. On connectivity of reconfigurable impact networks in Ageless Aerospace Vehicles. Journal of Robotics and Autonomous Systems, 51(1), 36-58, 2005.

பார்த்த எறும்புக் கூட்ட உச்சப்படுத்தல் கருத்துகளோடு நெருங்கிய தொடர்புடையது. இங்கே கணினியால் உருவாக்கப்பட்ட செயற்கை "எறும்புகள்" communication network முழுவதும் நகர்ந்து, பயனுள்ள பாதைகளில் pheromone போன்ற தடங்களை உருவாக்குகின்றன. காலப்போக்கில், சேதமடைந்த பகுதிகளை இணைக்கும் திறமையான பாதைகள் வலுப்பெறுகின்றன; பயனற்ற பாதைகள் மறைந்து விடுகின்றன.

மேலும், local memory அல்லது hysteresis முக்கியமானதாக இருப்பதும் இங்கே விளக்கப்படுகிறது. கலங்கள் தங்களது முந்தைய நிலைகளை ஓரளவு நினைவில் வைத்திருக்கும்போது, உருவாகும் அமைப்புகள் அதிக நிலைத்ததன்மையுடன் செயற்படுகின்றன. AAV செயற்றிட்டம், recovery membranes மற்றும் self=referential shape replication போன்ற மேலும் ஆழமான உயிரியற் பின்னணி உடைய கருத்துகளையும் ஆராய்கிறது. உயிரினங்களில் காணப்படும் காயம் மாறல், திசுக்கள் மீளமைத்தல், மற்றும் வடிவ மீளுருவாக்கம் போன்ற செயல்முறைகள் இங்கே முன்னுதாரணமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

-(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட சிற்றாலய நிலைவரம் ஆராய்வு

மன்னார்,மே 27

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட, முந்தல் கடற்கரையோரப் பகுதியில் அமைந்துள்ள அந்தோனியார் சிற்றாலயத்தைப் புனரமைப்பதற்கு முன்னாயத்தமாக, ஆலய நிலைவரத்தை மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேரடியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆராய்ந்தனர். பள்ளிமுனை உள்ளடங்கலாக குறித்த அந்தோனியார் சிற்றாலயப் பகுதியூடாக தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள், குறித்த ஆலயத்தைத் தரிசித்து விட்டுச் செல்வது வழமை. இந்தநிலையில் குறித்த ஆலயம் அண்மையில் ஏற்பட்ட புயல் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதுதொடர்பில் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மன்னார் நகர பிரதேச செயலர் கே.காந்தீபன்,மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் மற்றும் பள்ளிமுனை பங்குத்தந்தை,பள்ளிமுனை புனித லூசியா ஆலய நிர்வாகப் பிரதிநிதிகள், நகரசபை உறுப்பினர்கள், படகு மூலம் ஆலயத்துக்குச் சென்று, நிலைவரத்தை ஆராய்ந்தனர். சேதமடைந்த ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடினர். (க-56-பி)

# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு,மே 27

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு முன்னெச்சரிக்கையை தேசியகட்டட ஆராய்ச்சிநிறுவனம் விடுத்துள்ளது. இதற்கமைய, கேகாலை மாவட்டத்தின் தெரனியாகலை, ருவன்வெல்ல, தெஹியோவிட்ட மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட, குருவிட்ட, அயகம, இரத்தினபுரி ஆகிய பகுதிகளுக்கு வெளியேறுவதற்கான 'சிவப்பு' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், உடுவில் பிரதேச செயலகத்தில் மாதாந்தம் நடைபெற்று வரும், சந்தை நிகழ்வு பிரதேச செயலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. (க)



முல்லைத்தீவில் நடைபெற்ற வட மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மரதன் ஓட்டப்போட்டியில், நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய மாணவன் நாகேஸ்வரன் தினோஷன், இரண்டாம் இடத்தைப் பெற்று, தீவகக் கல்வி வலயத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார். (க)

# அகமதாபாத் - கொழும்புக்கு நேரடி விமானசேவை ஜூனில்

கொழும்பு,மே 27

இந்தியாவின் குஜராத் மாநிலத் தலைநகரான அகமதாபாத் மற்றும் கொழும்பு இடையே நேரடி விமானசேவைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன. இலங்கையின் முன்னணி தனியார் விமானசேவை நிறுவனமான பிட்ஸ்ஏயார், இந்த அகமதாபாத் - கொழும்பு வழித்தடத்தில் வாரத்துக்கு 3 நாள்கள் நேரடி விமான சேவைகளை இயக்கவுள்ளது.

தற்போது குஜராத்திலிருந்து இலங்கைக்குவரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் பிற இந்திய நகரங்களில் தங்கி, மாறிச் செல்லவேண்டியிருந்ததால் அவர்களின் பயணநேரம் சுமார் 9 மணிநேரமாகக் காணப்பட்டது. ஆனால், இந்தப் புதிய நேரடி வான்வழிச் சேவையின் மூலம் ஒட்டுமொத்தப் பயண நேரம் வெறும் 3 மணிநேரமாகக் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2025ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த ஒட்டுமொத்த சர்வதேசச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில், சுமார் 24 சதவீதத்தினர் இந்தியப் பயணிகளாவர். இந்த புதிய அகமதாபாத் நேரடி விமானசேவை அதற்கு மேலும் வலு சேர்க்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

அம்பிகை துணை



பச்சிலைப்பள்ளி, முகாவில், இயக்கச்சி,
அருள்மிகு திரியாய் அம்பாள் (பர்வதவர்த்தினி) தேவஸ்தான
திருக்குளிர்த்திப் பொங்கல் விழா
29.05.2026 வெள்ளிக்கிழமை

அம்பிகை மெய்யடியார்களே!

நிகழும் பராபவ வருடம் வைகாசித் திங்கள் 15ஆம் நாள் 29.05.2026 வெள்ளிக்கிழமை இயக்கச்சி, முகாவில்,திரியாய் அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் விழா இடம்பெறும். அன்று பகல், இரவு தொடர்ந்து விசேட அபிசேக ஆராதனைகளும் காவடி, பால்செம்பு, தீச்சட்டி, கரகம், பறவைக்காவடிகள் போன்ற நேர்த்திக்கடன் நிறைவேற்றல்களும் தொடர்ந்து நீராகாரமும், மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

பூசை நேரம்- வெள்ளிக்கிழமை (29.05.2026) மதியம் 1.00 மணிக்கு பூசையும், (30.05.2026) சனிக்கிழமை காலை 05.00 மணிக்கு வழிவெட்டு பூசையும் அதனை தொடர்ந்து பொதுக்கூட்டமும், நிர்வாக தெரிவும் இடம்பெறும்

குறிப்பு :-

- அன்றைய நாள் பாதுகாப்பு, முதலுதவி,சுகாதாரம் பேணல், குடிநீர் வசதி போன்றவைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் திருப்திகரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- விசேட போக்குவரத்து ஒழுங்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தனியார் போக்குவரத்து சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தமது பதிவுகளை 28.05.2026 வியாழக்கிழமை காலை 03.00 மணிக்கு முன்பதாக மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 555 2123, 077 347 4011, 077 494 4490

- ஆலயத்தின் வளர்ச்சிகருதி அர்ச்சனைப் பொருட்கள் ஆலய பரிபாலன சபையினரால் விற்பனை செய்யப்படும்.
- எந்தவொரு தனிநபரும் கற்பூரம், ஊதுபத்தி போன்றவை ஆலய வளாகத்தினுள் விற்பனை செய்ய முடியாது. (மீறி விற்பனை செய்தால் பொருட்கள் பறிமுதல் செய்யப்படும்.)
- உணவுப் பண்டங்களை விற்பனை செய்வோர் சுகாதார பணிமனையில் அனுமதி பெற்று வருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒலி பெருக்கி உபயம்:- மு.தங்கவேல் குடும்பம் (உடுத்துறை வடக்கு)

கணபதி ஒளி அமைப்பு உபயம்:- க.இளையதம்பி குடுப்பம் (வேம்படி உடுத்துறை வடக்கு)

**வழமை போன்று பொங்கல் விழா இரவு பகலாக நடைபெறும்.**

முகாவில், இயக்கச்சி, (CS/30429) J-1 -ஆலய பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செபஸ்தியார் ஆலயத்தால் சிவாஜிலிங்கத்துக்கு உதவி

யாழ்ப்பாணம், மே 27
வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் எம். கே.சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைக்காக வல்வெட்டித் துறை புனித செபஸ்தியார் ஆலய பங்குமக்கள், ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளனர். கடந்த காலங்களில் சிவாஜிலிங்கம் இந்த ஆலயப் புனரமைப்புக்காக பல இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியிருந்தார். அதற்கு நன்றிக் கடனாக, புனித செபஸ்தியார் ஆலய பங்குமக்கள், ஆலய நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபாவை, சிவாஜிலிங்கத்திடம் நேரடியாகக் கையளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)



## சிவாஜிலிங்கத்துக்கு ஐ.ம.சக்தி நிதியுதவி

யாழ்ப்பாணம், மே 27
மூத்த அரசியல்வாதி எம்.கே.சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக, ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு நிர்வாகிகள், ஒரு தொகை நிதியுதவியை வழங்கியுள்ளனர். யாழ்ப்பாணம்- கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருந்தவநாதன் அனோசன், ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆகியோர், வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்துக்கு நேரடியாகச் சென்று நிதியுதவியை வழங்கினர். (க-66-சி)



ரெலோவின்

## யாழ்.மாவட்ட அமைப்பாளராக முன்னாள் பிரதிமுதல்வர் ஈசன்



யாழ்ப்பாணம், மே 27
தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் துணைமுதல்வர் து.ஈசன் நியமிக்கப்பட்டுள்ளார்.
தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்.மாவட்ட தெரிவுக்குழு யாழ்ப்பாணம் தந்தை செல்வா மண்டபத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது. கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திலேயே தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் துணைமுதல்வர் து.ஈசன் தெரிவுசெய்யப்பட்டார். பிரதி அமைப்பாளராக மாநகரசபை உறுப்பினர் உதயசிறி தெரிவானார்.
யாழ்.மாவட்ட இளைஞர் அணியின் தலைவராக நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் ஜெயபாலன், மகளிர் அணியின் தலைவராக மேரி உசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-26)

## வேலணை மத்திய கல்லூரி மாணவி யாழ்.மாவட்ட கரம் அணிக்குத் தெரிவு



வேலணை மத்திய கல்லூரி மாணவி ஜெ.விதுர்சினி, கரம் போட்டியில், யாழ் மாவட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
யாழ்.மாவட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவுசெய்யும் போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. இதில் ஜெ.விதுர்சினி நடத்தப்பட்ட 8 போட்டிகளில் 7 போட்டிகளில் வெற்றி பெற்று மாவட்ட அணிக்குள் இடம்பிடித்துள்ளார்.
இதனடிப்படையில் இவர் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள மாகாணமட்டப் போட்டியில், யாழ் மாவட்ட அணி சார்பில் பங்குபற்றவுள்ளார். (க)

**பணிப்பெண் தேவை**

நடமாட முடியாத வயோதிபத் தாயாரை தங்கியிருந்து பராமரிக்க கூடிய பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிடம் மற்றும் இதர வசதிகளுடன் ரூபா 50,000 தரப்படும் மேற்படி வேலைக்கு வர விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம் இடம்: வடமராட்சி - கரவெட்டி

076 975 2479

(CR/47602) J-1

**House Keeping, சமையல் உதவியாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் விடுதி (Hotel) ஒன்றிற்கு House Keeping, சமையல் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிட வசதி உண்டு.

தொடர்புகளுக்கு: 074 213 7943

(CS/61522) J-1

## INVITATION FOR BIDS (IFB)
## URBAN COUNCIL, CHAVAKACHCHERI
## Council Fund -2026/01

1. The Chairman, Procurement Committee, on behalf of Chavakachcheri Urban Council now invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026.05.27 until 2026.06.11 from 09:00 hrs to 14:00 hrs.
4. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Section 5 of the Procurement document.
5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
   " Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Chavakachcheri Urban Council, Chavakachcheri (T.P No: 021 227 0806, Fax No: 021 227 0079) during the period from 2026.05.27 until 2026.06.11 from 09:00 hrs to 14:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table. The method of payment will be by cash
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Procurement Committee, Chavakachcheri Urban Council, Chavakachcheri at or before 10.30 hrs, 2026.06.12 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Chavakachcheri Urban Council, Chavakachcheri commencing at 11.30 am on 2026.06.03
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026.05.27 until 2026.06.11 |
| Pre-Bid Conference | At 11.30 A.M on 2026.06.03 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 2026.06.12 |

| S No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security/Bank Draft/Security Deposit: Security Amount | Required Bid Security/Bank Draft/Security Deposit: Validity Period | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(3)/2/CF/01/2026 | Reconstruction of Thailaiyadi amman Kovil road; Construction of yarl road left side 03rd Lane | 8.431 | 84 Days | C8& Above (Road) | 2000.00 | 84,500.00 | 25.09.2026 | 77 Days |
| 02 | NP/14/41(3)/2/CF/02/2026 | Construction of Dutchu road left side 1st lane Concrete road; Construction of Beach road 1st lane stage – II | 6.655 | 84 Days | C8& Above (Road) | 2000.00 | 67,000.00 | 25.09.2026 | 77 Days |
| 03 | NP/14/41(3)/2/CF/03/2026 | Construction of Kunchan thuravu road 1st lane; Reconstruction of Amman Road phase - II | 5.091 | 84 Days | C8& Above (Road) | 2000.00 | 51,000.00 | 25.09.2026 | 77Days |
| 04 | NP/14/41(3)/2/CF/04/2026 | Construction of Ponnar road phase- II | 2.713 | 84 Days | C9& Above (Road) | 2000.00 | 28,000.00 | 28.08.2026 | 49 Days |
| 05 | NP/14/41(3)/2/CF/05/2026 | Construction of Annamar road phase - II | 2.511 | 84 Days | C9& Above (Road) | 2000.00 | 26,000.00 | 28.08.2026 | 49 Days |

Chairman,
Procurement Committee
Urban Council, Chavakachcheri.
2026.05.27

(CR/47399) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள

# சர்ச்சைக்குரிய ஆதனத்தில் ஆளுநர் நேற்று களஆய்வு!

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான ஆதனமொன்று தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், அந்த ஆதனத்தில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று ஆய்வை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணம் ஜே/72 கிராம அலுவலர் பிரிவில் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமாக இருந்த ஆதனம் தனிநபரால் வெளிப்படுத்தல் உறுதிமூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண அவைத்தலைவரால் ஆளுநர் நா.வேதநாயகனிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே, சர்ச்சைக்குரிய ஆதனத்தை ஆளுநர் அதிகாரிகள் சகிதம் நேற்று நேரில் பார்வையிட்டார்.

குறித்த ஆதனமானது யாழ். மாநகர சபைக்கு உரித்தானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உத்தியோக பூர்வ ஆவணங்கள் மற்றும் நில அளவைத் திணைக்கள வரைபடங்கள் என்பன தம்மிடம் உள்ளமை தொடர்பில் யாழ். மாநகரசபையின் ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் இதன்போது ஆளுநருக்குத் தெளிவுபடுத்தினர். ஆயினும், குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சோலை வரியும் அறவிடப்பட்டுள்ளமை குறித்தும் இதன்போது ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

விடயங்களை விரிவாக ஆராய்ந்த ஆளுநர், குறித்த ஆதனம் தொடர்பான சந்தேகத்துக்கிடமான பெயர்மாற்றம் மற்றும் வரி அறவீட்டு விடயங்களைக் கையாண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைக் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்தார். அத்துடன், முறையற்ற விதத்தில் தனிநபர் வசமாகியுள்ள ஆதனத்தை மாநகரசபைக்கு மீட்டெடுப்ப தற்காகத் துரிதமாக நீதிமன்றப் பொறி முறைகளை நாடுமாறும் அவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கள ஆய்வின்போது, வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவர், யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல்வர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாநகரசபையின் ஆணையாளர், யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர், உரிய பிரிவின் கிராம அலுவலர் மற்றும் காணி அலுவலர் உள்ளிட்ட பல

## உயர்மட்டக்...

காணிகளை விடுவிப்பதற்கான சாத்தியம் தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள் உள்ளிட்ட முக்கியமான தரப்புகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

காணி விடுவிப்புத் தொடர்பில் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வருகின்றனர். அத்துடன் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நன்கு அறிந்த தரப்பாகவும் அவர்களே உள்ளனர். இவ்வாறான நிலையில் அவர்களைப் புறக்கணித்து, அவர்களின் கருத்துக்களை உள்வாங்காமல் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வலிகாமம் வடக்கிலேயே கணிசமான காணிகள் இராணுவத்தின் பிடியில் உள்ளன. அவை தொடர்பான முழுத் தகவல்களும் அறிந்தவராக வலிகாமம் வடக்குத் தவிசாளரே உள்ளார். அவரும் நேற்றைய கலந்துரையாடலில் அழைக்கப்படவில்லை. (அ-ம-26)

## படைத்தரப்புக்கு...

வைக்கப்பட்ட கோரிக்கைகள் இராணுவத்தால் நிராகரிக்கப்பட்டன. எனினும், இராணுவத்தின் நிலைப்பாட்டுக்கு எதிரான வலுவான அழுத்தத்தை யாழ்ப்பாணம் மாவட்ட அதிகாரிகள் வழங்கவில்லை. இராணுவத்தினர் கூறுவதைக் கேட்கும் நிலைப்பாட்டிலேயே அவர்கள் இருந்தனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணி விடுவிப்பு நடவடிக்கை நேற்று வெற்றியளிக்காமைக்கு அரச அதிகாரிகளின் மந்தமான செயற்பாடே காரணம் என்று கூறப்படுகின்றது.

ஒப்பீட்டளவில் ஏனைய மாவட்டங்களின் அரச அதிகாரிகள் முழுமையான தரவுகளுடன் வலுவான கோரிக்கைகளை இராணுவத்திடம் முன்வைத்து தமக்கான தீர்வைப் பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## உயர்பாதுகாப்பு...

பில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்ததாவது:-

மக்களின் காணி மக்களுக்கு என்பதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும். அதற்கு அமைய கணிசமான காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. உடனடியாக விடுவிக்கக்கூடிய சில காணிகளை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அந்தக் காணிகளை விடுவிக்கும் பணிகள் மிக விரைவில் ஆரம்பமாகும். விமான நிலைய விஸ்தரிப்புக்காக எத்தனை ஏக்கர் காணிகள் தேவை என்பது தொடர்பில் தற்போது ஆராயப்படுகிறது. அந்த காணிகளை [illegible] தொடர்பில்

எதிர்காலத்தில் கலந்துரையாடல் நடைபெறும். அதுபோல் விவசாயக் காணிகளை விடுவிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம)

## வீட்டிலிருந்து...

அமைச்சரவை முடிவை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நிலைமை மற்றும் எரிபொருள் சேமிப்பு உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு வீட்டில் இருந்து வேலைசெய்யும் நடைமுறையைப் பின்பற்றுவதாக தகவல்கள் வெளிவருகின்றன. அவ்வாறு எவ்வித பரிசீலனைகளும் தற்போதுவரை இடம்பெறவில்லை. அத்தகைய கலந்துரையாடல்கள் இடம்பெற்றால் நாங்கள் உரியமுறையில் அறிவிப்போம் - என்றார். (அ-ம-இ)

## பொய்...!

வலி.வடக்குக்கு மேற்கொண்ட பயணத்தின்போது பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலய பாதை விடுவிக்கப்படாத விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து, அந்த வீதியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாக்குறுதி பிரதிப் பாதுகாப்பு அமைச்சரால் வழங்கப்பட்டது. (அ-ம-26)

## தேசிய...

ளது. இதில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அணியிலேயே தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகள் நால்வர் இடம்பிடித்துள்ளனர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் மாணவிகளான பா.சானு, சி.தர்மிகா (வலிகாமம் லீக்), தற்போதைய மாணவிகளான லயன்சிகா, யோ.உமாசங்கவி ஆகியோரே இவ்வாறு தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்துத்துள்ளனர். இதேவேளை, தேசிய அணியின் இளம் வீராங்கனையாக உமாசங்கவி பதிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## காணிகளை...

வடமாகாணத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள். காணி விடுவிப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். ஏனைய மாவட்டங்களில் சில காணிகளை விடுவிப்பதற்கு இராணுவம் ஓரளவு இணக்கம் தெரிவித்த போதிலும் யாழ். மாவட்டத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளில் கணிசமானவற்றை விடுவிப்பதற்கு இராணுவம் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதன்படி, பருத்தித்துறை பொன்னாலை பிரதான வீதியில் காங்கேசன்துறை சந்தியில் இருந்து கீரிமலை வரையான வீதியை விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை இராணுவத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அங்கு கடற்படை முகாம் உள்ளது என்று கூறி அந்த வீதி விடுவிப்புக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள் ளது. அத்துடன், யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள சிங்கள மகா வித்தியாலயம், பலாலி இராணுவ மருத்துவமனை ஆகியவற்றை விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் இராணுவத்தால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டுள்ளன. 'பரிசீலனை செய்யப்படும்' என்ற வாக்குறுதிகூட இந்தக் காணிகள் தொடர்பில் வழங்கப்படவில்லை.

வயாவிளானிலுள்ளசிறிவேலுப்பிள்ளை வித்தியாலயம், தல்செவன விடுதிக்கு அருகிலுள்ள சிறுவர் பூங்காவின் பாதை, பலாலி சந்திப் பகுதியில் உள்ள சந்தை உள்ளிட்டவற்றை விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இராணுவம் சாதகமாகப் பதிலளித்துள்ளது. எனினும், அவை எப்போது விடுவிக்கப்படும் என்ற தகவல்களோ, நிச்சயம் விடுவிக்கப்படும் என்ற உத்தரவாதமோ வழங்கப்படவில்லை. (அ-ம-26)

## பலாலி...

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற காணிவிடுவிப்புக் கலந்துரையாடலில், 24 மணிநேரமும் பலாலி வீதியைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கோரிக்கை விடுத்திருந்தார். அவருடைய கோரிக்கை இராணுவத்தால் நிராகரிக்கப்பட்டது. எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தொடர்ச்சியாக முன்வைத்த வலியுறுத்தலையடுத்து இரவு 8 மணிவரை வீதியைத் திறந்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது காலை 6 மணிதொடக்கம் இரவு 7 மணி வரை பலாலி வீதி பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## இராணுவத்துடன்...

ஈடுபட்டனர். வடக்கு மாகாணத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஆராயும் உயர்மட்ட கலந்துரையாடல் வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய போதிலும் அவற்றை விடுவிப்பதற்கு இராணுவம் தொடர்ச்சியாகப் பின்னடித்தது. இதையடுத்தே, காணிகளை விடுவிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அமைச்சர் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், யாழ். மாநகரசபை உறுப்பினர் கபிலன் உள்ளிட்ட தரப்பினர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களின் கருத்தைத் தொடர்ந்தே பலாலி வீதி உள்ளிட்ட பல விடயங்களில் இராணுவம் விட்டுக்கொடுப்பை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.பி.எல். தொடரில்

# இறுதியாட்டத்துக்கு பெங்களூர் தகுதி!

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது தகுதியாட்டத்தில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குச் சென்றது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி அணித்தலைவர் ரஜத் படிதாரின் அபாரமான ஆட்டத்தால் 5 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக படிதார் 93 ஓட்டங்களையும், கோலி 43 ஓட்டங்களையும், குருனல் பாண்டியா 43 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணி முன்வரிசை வீரர்களை அடுத்தடுத்து இழந்தது. 88 ஓட்டங்களில் அந்த அணி 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், அதன்பின்னர் சிறப்பாக விளையாடிய தெவட்டியா 68 ஓட்டங்களைக் குவித்தார். இதையடுத்து, 162 ஓட்டங்களுடன் குஜராத் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. 92 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது பெங்களூர் றோயலு; சலஞ்சர்ஸ். இன்று நடைபெறவுள்ள விலகல் ஆட்டத்தில் ஹைதராபாத், ராஜஸ்தான் அணிகள் மோதவுள்ளன. (ம)



# பேராசிரியர் தேவராஜாவின் பவளவிழாக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறையின் முதலாவது பேராசிரியர் க. தேவராஜாவின் 75ஆவது அகவையைக் குறிக்கும் பவளவிழா, இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள கந்தையா அன்னம்மா, இராஜையா இராசம்மா அரங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தேவா பவளவிழாச் சபையின் தலைவர் க. கனகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 'தேவாமிர்தம் 4' நூல் வெளியிடப்பட்டதுடன், இணுவில் மக்களால் பேராசிரியர் சமூகப் பணி வித்தகர் எனும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வாழ்நாள் பேராசிரியர்களான பொன். பாலசுந்தரம்பிள்ளை, வல்லிபுரம் மகேஸ்வரன், வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி கந்தையா சிறீகணேசன், பேராசிரியர் க. சிவானந்தமூர்த்தி, வவுனியாப் பல்கலைக்கழக வேந்தர் எஸ். மோகனதாஸ் மற்றும் கல்வியியலாளர்கள், பல்துறை சார்ந்தவர்கள், சமூக ஆர்வலர்கள், கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)


## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கி இருந்து வேலை செய்யக் கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் : 70,000/=
Location :-
S.A.W & Hambantota
தொடர்பு: 077 480 3379
(CS 61519) J-1



## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதிக்கு கீழ்க்கண்ட பணிகளுக்காக பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- சுத்திகரிப்பு பணியாளர்கள்
- பாதுகாப்பு பணியாளர்கள்
- காசாளர் - (பகுதி நேரம் / முழுநேரம்)
- Food & Beverage Waiter
- Room Attendant

தொடர்புகளுக்கு:—
076 624 8529, 076 315 1060
E- Mail :- hrvalampuri@gmail.com
CS/61523) J-1



## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை செல்லும் பேருந்தில் வவுனியாவிற்கு இடைப்பட்ட பகுதியில் சிறீதரன் ரிஷாவர்மன் என்பவருடைய கடவுச்சீட்டு (Passport) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசி எண்ணிற்கு தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 074 168 4736
CS/61518) J-1



## காணி விற்பனைக்கு

யாழ் அச்சுவேலி நவக்கிரியில் 3 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு.

- அச்சுவேலியிலிருந்து நிலாவரை செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில்
- ஒன்றரை (1 1/2) பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 15 அடி பாதையுடன்
- சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதி 200m தூரம்
- அச்சுவேலி நகரம் 2km
- பருத்தித்துறை வீதி 1km தூரம் (புத்தூர் சந்தி)
- நிலாவரை கிணறு 700m தூரம்
- செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
- ஒரு பரப்பின் விலை 18 இலட்சம் மட்டும் (1800000/=)

தொடர்புகளுக்கு:
077 2880 152, 076 7390 413
(CS 31876) J-1


## நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் அமரர் பேராசிரியர் சோமசுந்தரம் செல்வநாயகத்தின் நினைவுப்பேருரை இன்று புதன்கிழமை காலை 10மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முன்னாள் விவசாய விஞ்ஞானி முதல்வரும் தேசிய தொழில்நுட்ப நிபுணருமான கலாநிதி. மொகமட் சரபுடீன் நிஜமுடீன் "நீர் நெருக்கடியான பிராந்தியங்களில் விவசாயத்தினை நிலைபேறாக்கிக் கொள்ளல் பிரச்சினைகள் சவால்கள் மற்றும் எதிர்கால தெரிவுகள்' என்பதை மையமாகக் கொண்டு நினைவுப் பேருரை ஆற்றுவார். (41)


## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 10 . 1934



மறைவு
25 . 05 . 2026

### திருமதி செல்லையா லீலாவதி

அராலி தெற்கு

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா லீலாவதி அவர்கள் கடந்த 25.05.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு - தங்கம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், சுன்னாகம் கிழக்கைச் சேரந்த காலஞ்சென்ற வைரவி செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், சேனாதிராஜா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), உதயசூரியன், கலாரஞ்சினி, மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திராதேவி, கமலாசினி, கமலரஞ்சிதன், சிராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜீவ், நர்மதா, தனஞ்சயன், திஷாவந்தி, ஜனார்த்தன், சுயதன், தமிழனி, சாகித்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்ஷரா, ஆருத், ருக்மினி, ஆரியன், ஜரா, யுவன், சௌமியா, சாம்பவி, சீதாலக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.05.2026) வியாழக்கிழமை அன்று அராலி தெற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் அராலி தெற்கு பூனாவடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 226 1693(சேனாதிராஜா)
(CS 31879)A




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media